கற்றல் கையேடு

குடியியற்கல்வி

தரம் 11

- 2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கமைவானது.
- பாடநூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பவற்றிற்கேற்ப தயாரிக்கப்பட்டது.
- அலகுகளின் பாடவேளைகளையும் அதற்குரிய கற்றற்பேறுகளையும் உள்ளடக்கியது.

நா.செல்வச்சந்திரன்

ஆக்கம் :- நா.செல்வச்சந்திரன்

ஆசிரியர் யா/அராலி இந்துக் கல்லூரி.

அலகு 01

சட்டமும் நீதியும்

(பாடவேளை 15)

பாடவேளை 01

சட்டம் பற்றிய வரைவிலக்கணங்கள்

01 சட்டம் என்பதற்கு கூறப்படும் வரைவிலக்கணங்கள் எவை?

பொது - ஒரு நாட்டின் அல்லது சமுகத்தின் முறைப்படுத்தப்பட்ட மனித நடத்தைகள், செயற்பாடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவது மற்றும் நன்மை கருதி விதிக்கப்படும் ஒழுங்குகள் ஆகும்.

ஜோன்ஒஸ்டின் - சட்டம் என்பது இறைமையுடைய அரசியல் அதிகாரத்தால் விடுக்கப்படும் கட்டளையாகும். அதனை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ரீ.எச்.கிறீன் - அரசினால் செயற்படுத்தப்படும் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான ஒரு தொகுதியாகும்.

நா.செல்வச்சந்திரன்

02 சட்டம் செயற்படும் சமுகமொன்றின் இலட்சணங்கள் எவை?

நீதி, சமாதானம், பாதுகாப்பு

03 சட்டத்தின் பிரதான நோக்கம் யாது?

பொதுமக்களின் வாழ்க்கை, உரிமைகள் மற்றும் சொத்துக்கள் ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் மனித நடவடிக்கைகளை நிர்வகிப்பதன் ஊடாக நீதியை நிலைநாட்டுவதாகும்.

04 சட்டத்துடன் இணைந்த மற்றைய எண்ணக்கரு எது?

நீதி

05 நீதி என்றால் என்ன?

சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுவான நடத்தையாகும்.

06 நீதியை நிலை நாட்டுவதில் கவனம் செலுத்தும் விடயங்கள் எவை?

1 தனக்கு உதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டினை அறிந்துகொள்வதற்கான உரிமை

2 தனக்காகத்தான் நீதிமன்றில் ஆஜரவாதற்கு அல்லது சட்டத்தரணி ணருவர் மூலம் கருத்துக்களை முன்வைப்பதற்கான உரிமை

3 நீதியானதும் பக்கச்சார்பற்றதுமான தீர்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை

05 சட்டத்தின் பண்புகள் எவை?

1 அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்ட அரசு ஒன்றின் மூலம் விதிக்கப்படல்.

2 சட்டத்தை மீறுவோருக்கு தண்டனை வழங்கக்கூடியதாக இருத்தல்.

3 விளக்கமாகவும் தெளிவாகவும் இனங்காணக்கூடியதாக இருத்தல்.

4 சமுக நன்மையைக் நோக்காகக் கொண்டு விதிக்கப்படுதல்.

5 மாறுகின்ற சமூகத்தேவைக்கேற்ப மாறும்தன்மையைக் கொண்டிருத்தல்.

6 நீதியானதும் நேர்மையானதாகவும் காணப்படல்.

நா.தேவச்சந்திரன்

06 சட்டம் உருவாவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை?

1 முதன்மையான மூலாதாரங்கள்

அரசியல் யாப்பு

பல்வேறு கட்டளைச் சட்டங்கள்

நீதிமன்றத் தீர்ப்புக்கள்

2 துணையான மூலாதாரங்கள்

மரபுகள்

வழக்காறுகள்.

சமயம்

சட்டவல்லுநர்களின் கருத்துக்களும் சிந்தனைகளும்

(இவற்றுக்கான விளக்கங்களை எழுதுவித்தல் வேண்டும்)

பாடவேளை 02

சட்டத்தின் வகைகள்

01 சட்டத்தின் வகைகள் எவை?

1 தேசியச்சட்டம் அல்லது சுதேச சட்டம்

2 சர்வதேச சட்டம்

சுதேச சட்டம்

02 சுதேச சட்டம் என்றால் என்ன?

ஒரு நாடு தனது எல்லைக்குள் செயற்படுத்தும்வகையில் விதிக்கும் சட்டங்கள் ஆகும். இவை நாட்டின் தேவைக்கு ஏற்ப விதிக்கப்படுவதனால் தேசிய சட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும்.

03 சுதேச சட்டத்தின் வகைகள் எவை?

1 அரசியல் யாப்புச் சட்டம் 2 குற்றவியல் சட்டம் 3 குடியியல் சட்டம்

நா.செல்வச்சந்திரன்

அரசியல் யாப்புச் சட்டம்

04 அரசியல் யாப்புச்சட்டம் என்றால் என்ன?

அரச அதிகாரத்தைச் செயற்படுத்தும் உயர் சட்டங்களாகும்.

05 இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு எது?

1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு

குற்றவியல் சட்டம்

06 குற்றவியல் சட்டம் என்றால் என்ன?

தனிநபர் அல்லது குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும் 4முகத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் தொடர்பான சட்டங்களாகும்.

உதாரணம் :- கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைப்பொருள் விற்பனை, அரசுக்கெதிரான செயற்பாடுகள், பொதுச் சொத்துக்களுக்கு தீங்கிழைத்தல், சிறுவர் துஸ்பிரயோகம்

குடியியல் சட்டம்

07 குடியியல் சட்டம் என்றால் என்ன?

சமுகத்தில் தனி நபர்களுக்கிடையிலான தொடர்புகளைக் கட்டுப்படுத்துவதுடன் அவர்களின் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களாகும்.

உதாரணம் :- ஒப்பந்தப் பிரச்சினை, திருமணப் பிரச்சினை, மரபுகள் உரிமைகள் பற்றிய பிரச்சினை, வங்கி நடவடிக்கைகள், வர்த்தக நடவடிக்கைகள்

08 குற்றவியல் சட்டத்திற்கும் குடியியல் சட்டத்திற்குமிடையிலான வேறுபாடுகள் எவை?

குற்றவியல் சட்டம்	**சிவில் சட்டம்**
தனி நபர் ஒருவர் மற்றொரு நபரின் வாழ்க்கைக்கு அல்லது சொத்துக்களுக்கு தீங்கிழைக்கும் போது இச்சட்டம் செயற்படும்	தனி நபர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சட்டமாகும்.
குற்றங்களுக்குரிய தண்டனைகள் வழங்கப்படும் உதாரணமாக மரண தண்டனை, சிறைத்தண்டனை	சிவில் குற்றங்களுக்கு நஷ்டஈடு வழங்கல், தண்டப்பணம் செலுத்தல் முதலிய தண்டனை வழங்கப்படும்.
குற்றவியல் சட்டத்தில் தண்டனை வழங்கல் மற்றும் புனர்வாழ்வளித்தல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.	சிவில் சட்டத்தில் தீங்கு நிவர்த்தி செய்யப்படுதல், மற்றும் இயல்பு நிலையை ஏற்படுத்தல் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை 03

சர்வதேச சட்டம்

01 சர்வதேச சட்டம் என்றால் என்ன?

அரசுகள் மற்றும் அரசுகளுக்கு இடையிலான தொடர்புகளையும் சர்வதேச அமைப்புக்களைப் போன்று அரச சார்பற்ற நிறுவனங்களையம் தனிநபர்களையும் கட்டுப்படுத்தும் சட்டமே சர்வதேசச் சட்டமாகும்.

02 சர்வதேச சட்டத்தின் முதன்மையான குறிக்கோள் யாது?

நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை முறைமையான வகையில் கட்டுப்படுத்தல்.

03 தற்போதுள்ள சர்வதேச சட்டத்துடன் இணைந்த சட்டப் பிரிவுகள் எவை?

மனித உரிமைகள் சட்டம், சுற்றாடல் சட்டம், முதலீட்டுச் சட்டம், சமுத்திரச்சட்டம்

04 சர்வதேச சட்டங்களை மீறும்போது செயற்படும் நிறுவனங்கள் எவை?

1 சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 2 சர்வதேச நீதிமன்றம்

பாடவேளை 04

இலங்கையில் செயற்படும் சட்டத்தொகுதிகள்

01 இலங்கையில் செயற்படும் பொதுச் சட்டமாக விளங்குவது எது?

உரோமன் டச்சுச்சட்டம்

02 இலங்கையில் செயற்படும் ஏனைய சட்டங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக?

1 கண்டியச்சட்டம்/ மலையகச் சட்டம்

கா. செல்வச்சந்திரன்

- இச்சட்டம் முற்காலத்தில் கண்டி இராச்சியத்தில் செயற்பட்டது.
- ஆங்கிலேயர் காலத்தில் கண்டி இராச்சிய எல்லைக்குள் வாழ்ந்த சிங்களவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது.
- தற்காலத்தில் கண்டியச் சிங்களவர்களின் விவாகம், விவாகரத்து, சொத்துரிமை முதலிய விடயங்கள் இச்சட்டதின்படி செயற்படுத்தப்பட்டது.
- தேவையேற்படின் கண்டிச் சிங்களவர்கள் பொதுச்சட்டத்தின் கீழும் த்மை உட்படுத்திக் கொள்ளலாம்.

2 தேசவழமைச்சட்டம்

- வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் சம்பிரதாயங்களின் அடிப்படையில் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 1706ம் ஆண்டு இங்கிருந்த மரபுகளும், வழக்காறுகளும் சட்டமாகத் தொகுக்கப்பட்டன.
- தற்போதும் வடமாகாணத் தமிழ் மக்களுக்குரிய சட்டமாக இது திகழ்கின்றது
- மரபுகள், உரிமைகள், சொத்துரிமை போன்ற விடயங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

3 முஸ்லிம் சட்டம்

- இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்களுக்குரிய சட்டமாகும்.
- இச்சட்டத்தின் மூலாதாரங்களாக அல்குர்ஆன்(முதன்மையான மூலாதாரமாகும். இறைவனால் முஹம்மது நபி அவர்களுக்கு அருளப்பட்ட வேதமாகும்), அல்ஹதீஸ்(இரண்டாவது மூலாதாரமாகும் முஹம்மது நபி அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பனவாகும்), இஜ்மாஉ(இதன் கருத்து ஏகோபித்த முடிவு), கியாஸ் என்பன அமைகின்றன.
- 1806இல் தயாரிக்கப்பட்ட முஹமதியர் சட்டத்தொகுப்பே தற்போது செயற்படுத்தப்படுகின்றது.
- இதில் முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து, மரபுகள், உரிமைகள், வளர்ப்புப்பிள்ளைகள் முதலிய விடயங்கள் உள்ளடங்குகின்றன.
- 1929ம் ஆண்டு முஸ்லிம்களின் விவாகரத்து தொடர்பாக காதி நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

03 சட்டம் தொடர்பான அரசின் வகிபாகங்கள் எவை?

1 நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டி சிறந்த சமுகம் ணன்றை கட்டியெழுப்புதல்

நா.செல்வச்சந்திரன்

2 நாட்டில் ஏற்படும் பிரச்சினைகள், சட்டமீறல்களின் போது தேசிய சட்டத்திற்கேற்ப செயற்படுதல்

3 ஏனைய நாடுகளுடன் தொடர்புகொள்ளும் போது சர்வதேச சட்டத்திற்கமைவாக செயற்பட்டு நாட்டின் கௌரவத்தைப் பாதுகாத்தல்

பாடவேளை 05

நீதிமன்றத் தொகுதியின் வரலாற்று ரீதியான வளர்ச்சி

01 இலங்கையின் நீதிமன்றத் தொகுதிகளின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை விளக்குக?

1 மன்னர் ஆட்சிக்காலம் - அரசன் நீதிமன்றத்தின் உயர் அதிகாரியாக இருத்தல்

- எழுதப்பட்ட சட்டங்கள் மூலம் நீதிமன்றம் செயற்படுத்தப்பட்டது
- இறுதி மேன்முறையீட்டு நீதிபதியாக அரசரே செயற்பட்டார்.

2 போர்த்துக்கேயர் காலம் - கோரளைமார், விதானைமார், திசாவைமார் என்போரால் நீதிமன்ற அதிகாரம் செயற்படுத்தப்பட்டது.

3 ஒல்லாந்தர் காலம் - லான்ராட், சிவில்ராட், ராத்வேன்ஜஸ்டிஸ் என்ற நீதிமன்ற அமைப்புக்கள் காணப்பட்டன.

- கொழும்பு, யாழ்ப்பாணம், காலி எனும் பிரதான நீதிமன்ற மாவட்டங்கள் காணப்பட்டன
- உரோமன் டச்சுச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது

4 பிரித்தானியர் காலம் - உரோமன் டச்சுச்சட்டம் செயற்படுத்தப்பட்டது.

- இலங்கையின் உயர் தீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து பிரித்தானிய உயர் நீதிமன்றமான கோமறைக்கழகத்தில் மேன்முறையீடு செய்ய முடியும்.
- 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில் இவ்வதிகாரம் நீக்கப்பட்டது.

நா.செல்வச்சந்திரன்

5 1972ம் முதலாம் குடியரசு யாப்பு – உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ளப்படல்

- மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் என்பன அமைக்கப்பட்டன.

6 1978ம் இரண்டாம் குடியரசு யாப்பு – உயர் நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றம்

மாகாண மேல் நீதிமன்றம்

மேல் நீதிமன்றம்

மாவட்ட நீதிமன்றம்

நீதிவான் நீதிமன்றம்

7 பாராளுமன்றத்தின் விசேட கட்டளைச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட நீதிமன்ற அதிகாரங்களுடன் கூடிய நிறுவனங்கள்

1 தொழில் பிரச்சினை தொடர்பாக → தொழிலாளர் தீர்வு சபை

2 முஸ்லிம் விவாகரத்து → காதி நீதிமன்றம்

3 வாடகை வீட்டுப் பிரச்சினை தொடர்பாக → வீட்டு வாடகை சபை

4 இணக்கசபை(தற்காலத்தில் நீதிமன்றம் செல்லாமலேயே தீர்வு காண்பதற்கு)

பாடவேளை 06

01 உயர் நீதிமன்றம்

- இலங்கையின் இறுதியானதும் அதிஉயர் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரமுடைய நீதிமன்றமாகும்.
- இதன் தலைவர் பிரதம நீதியரசராவார்.
- பிரதம நீதியரசருடன் 06இற்கு குறையாததும்10இற்கு மேற்படாததுமான நீதியரசர்களைக் கொண்டது.
- இவர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்.
- இதன் அதிகாரங்கள்
  - அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறுதல்
  - அடிப்படை உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்தல்
  - சனாதிபதி தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
  - ஆலோசனை வழங்குதல்
  - இறுதி மேன்முறையீட்டை விசாரித்தல்
  - மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.
  - பாராளுமன்ற சிறப்புரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்தல்.

02 மேன்முறையீட்டு நீதிமன்றம்

- உயர் நீதிமன்றத்தை அடுத்து சிரேஷ்ட நீதிமன்றமாகும்.
- இதன் பிரதானியாகச் செயற்படுபவர் மேன்முறையிடுடு நீதிமன்றத்தின் தலைவராவார்.
- தலைவருடன் 06இற்குக் குறையாத 11 இற்கு மேற்படாத நீதிபதிகள் காணப்படுவர்.
- நீதிபதிகளின் நியமனம் யாப்புத்திட்டசபையின் அனுமதியுடன் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும்.

நா.தேவேச்சந்திரன்

- இதன் அதிகாரங்கள்
  - பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல்
  - பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்தல்(போபியஸ்கோபஸ், சர்சியோராரி, மெண்டிமுஸ்)
  - மேல் நீதிமன்றம் மற்றம் வேற நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து தொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்தல்
  - நீதிமன்றத்தின் அறிக்கைகளை திறனாய்வு செய்வதற்கும் பரிசீலிப்பதற்குமான அதிகாரம்

பாடவேளை 07

03 மாகாண உயர் நீதிமன்றம்

- 1978ஆம் ஆண்டு குடியரசு யாப்பில் 1987 இல் மேற்கொள்ளப்பட்ட 13வது சீர்திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்டது.
- நீதிபதிகள் பிரதம நீதியரசரால் நியமிக்கப்படுவர்
- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை மாகாண மட்டத்திற்க விஸ்தரிப்பதே இதன் நோக்கமாகும்.
- இதன் அதிகாரங்கள்
  - வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
  - ஆரம்பநிலை, நீதிவான், மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்
  - மாகாணசபைகளுக்கு ஹபயாஸ்கோபயஸ் (ஆட்கொணர்வு மனு) கட்டளைகளைப் பிறப்பித்தல்
  - தொழில் நீதிமன்றத் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்
  - மாகாணசபைகளுக்குரிய கட்டளைகளை விதித்தல்.

04 மேல் நீதிமன்றம்

1 பாரிய குற்றச்செயல்கள் தொடர்பான நீதி அதிகாரம்

கொலை, கற்பழிப்பு, அரச விரோத சூழ்ச்சிகள், பாரிய கொள்ளை

2 கடற்பரப்பு குற்றச்செயல்கள் தொடர்பான நீதி அதிகாரம்

3 இலங்கை வான்பரப்பில் மேற்கொள்ளப்படும் குற்றம் தொடர்பான நீதி அதிகாரம்

4 இலங்கையர் ஒருவர் வெளிநாட்டில் புரிந்த குற்றச்செயல்கள்

5 துஸ்பிரயோகத்துக்குட்பட்ட சிறுவர்களை ஒப்படைத்தல் அல்லது அவ்வாறான சிறுவர்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்தல்.

6 நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களை ஆராய்தல்.

பாடவேளை 08

05 மாவட்ட நீதிமன்றம்

1 54 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன.

2 குறித்த மாவட்டங்களுக்குரிய அனைத்து குடிசார் வழக்குகளும் விசாரிக்கப்படும்

3 நீதிபதிகளை நியமிப்பதும் விலக்குவதும் நீதிச்சேவை ஆணைக்குழுவாகும்.

4 தீர்க்கப்படும் வழக்குகள் வருமாறு

- விவாகம் தொடர்பான வழக்குகள்
- தெஸ்தமென்து(விருப்பாவண வழக்கு)
- காணி வழக்குகள்
- பிள்ளைகளைத் தத்தெடுப்பதற்கான விண்ணப்பம்
- பிரிவினை வழக்குகள்
- கற்பழிப்புத் தொடர்பான வழக்குகள்
- பிறப்புச் சான்றிதழில் பெயர் மாற்றங்களுக்கான விண்ணப்பம்
- விபத்து நட்டஈடு மற்றும் காப்புறுதி வழக்குகள்

நா.செல்வச்சந்திரன்

06 நீதவான் நீதிமன்றங்கள்

1 74 நீதிமன்ற கோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

2 2 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை, 1500 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணத்தால் தண்டிக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும் தன்மை வாய்ந்தது.

3 இந்நீதிமன்றத்தின் தீர்ப்பில் திருப்தி அடையாதவர் மாகாண மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

4 இதன் அதிகாரங்கள்

- பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான குற்றச் செயல்கள்
- போர், விமானப்படை, கடற்படை, இராணுவம் தொடர்பான குற்றங்கள்
- அரச ஊழியர் தொடர்பான குற்றங்கள்
- தேர்தல் தொடர்பான குற்றங்கள்
- பொய்ச்சாட்சியமளித்தல், பொதுமக்களின் நீதிக்கு எதிரான குற்றங்கள்

5 பாராளுமன்ற கட்டளைச் சட்டங்கள் மூலம் இனங்காணப்படடுள்ள குற்றம் தொடர்பாகவும் செயற்படும்

வனப்பாதுகாப்புச் சட்டம், மதுவரிக் கட்டளைச்சட்டம், நறுமணப்பொருட்கள் மற்றும் ஒளடதங்கள் கட்டளைச்சட்டம், மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச்சட்டம், வீதி அதிகார சபைக் கட்டளைச் சட்டம்

பாடவேளை 09

01 இலங்கையில் சட்டத்தைச் செயற்படுத்தும் பிரதான நீதி அலுவலர்கள் யாவர்?

1 நீதி அமைச்சர்

2 பிரதம நீதியரசர்

3 சட்டமா அதிபர்

02 நீதி அமைச்சர்

1 நீதித்துறைக்குரிய சட்ட வரைவுகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து தேவையான சட்டங்களை இயற்றுதல்.

நா.செல்வச்சந்திரன்

2 நீதித்துறை தொடர்பாக பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளித்தல்

3 சமாதான நீதவான்களை நியமனஞ் செய்தல்

03 பிரதம நீதியரசர்

1 உச்ச நீதிமன்றத்தின் தலைவராக இருத்தல்

2 நீதிச்சேவை ஆணைக்குழவின் தலைவராக இருத்தல்

3 சட்டக் கற்கைகள் சபையின் தலைவராக இருத்தல்

4 உச்ச நீதிமன்றப் பதிவாளர் நாயகம் மற்றும் அவரின் அலுவலக மேற்பார்வை

5 நீதிமன்ற நிர்வாக ஒழுங்கமைப்பு

04 சட்ட விதிகளை வகுப்பதற்கான நீதித்துறையின் செயற்பாடுகள் எவை?

1 மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளல், விசாரணை செய்தல், நிராகரித்தல்

2 பிணை வழங்கல், வழக்கு விசாரணைகளை நிறுத்தல்

3 சட்டத்தரணிகளின் தொழில் தொடர்பான நடவடிக்கைகள்

4 நீதிமன்ற விதிகளை மறுசீரமைத்தல், மாற்றியமைத்தல்

5 ஜூரிசபை தொடர்பான நடவடிக்கைகள்.

6 பிஸ்கால் அதிகாரிகள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்.

பாடவேளை 10

சட்டமா அதிபர்

01 தற்போதைய சட்டமா அதிபர் பதவி உருவாக்கப்பட்ட ஆண்டு

1833ம் ஆண்டின் முதலாம் இலக்க கட்டளைச்சட்டம்

02 இலங்கைக் குடியரசின் பிரதான சட்டஅதிகாரி சட்டத்துறைத் தலைவர், அரசின் சகல சட்டக்கருமங்கள் தொடர்பாகவும் அரசின் சார்பாக பங்கேற்பவர் யார்?

நா.செல்வச்சந்திரன்

சட்டமா அதிபர்

03 சட்டமா அதிபரின் அதிகாரங்கள் எவை?

1 போதியளவு சாட்சிகள் இல்லாத வழக்கில் குற்றவாளிகளை விடுதலை செய்தல்.

2 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் அரசியல் யாப்புக்கு முரணாகாத தன்மையைப் பாதுகாத்தல்.

3 அமைச்சர் ஒருவருக்கோ அமைச்சின் செயலாளர் ஒருவருக்கோ அரச அதிகாரி ஒருவருக்கோ வழக்கொன்றைத் தொடுப்பதற்கு முன்னர் சட்டமா அதிபருக்கு அறிவித்தல்.

4 அரச திணைக்கள அதிகாரிகளை தேவையான சந்தர்ப்பத்தில் அழைத்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

5 சில வழக்குகளை குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு அனுமதியளித்தல்.

04 சட்டமா அதிபரின் பணிகள் எவை?

1 அரசு மற்றும் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான வழக்குகளின் போது அரசு சார்பில் ஆஜாராகுதல்

2 அரசாங்க வழக்குகளின் போது தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்கதல்

3 அரசின் சார்பாக அல்லது அரசுக்கு எதிராக சகல சட்ட நடவடிக்கைகளையும் கோவைப்படுத்தல்

4 பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்

5 மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான சிபாரிசுகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தல்

06 சட்டமா அதிபரின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் யாவர்?

1 சொலிசிட்டர் ஜெனரல்

2 மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்

3 பிரதி சொலிசிட்டர் ஜெனரல்

4 அரச சிரேஷ்ட சட்டத்தரணிகள்

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை 11

வழக்கு விசாரணைக்கான மாற்று வழிமுறைகள்

01 வழக்கு விசாரணைக்கான மாற்று வழிகள் தேவைப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 காலம், சிரமம், பணம் என்பன பாதுகாக்கப்படல்

2 இரு தரப்பினரும் விரைவான தீர்வொன்றை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்

02 வழக்கு விசாரணைக்கான மாற்று வழிகள் எவை?

1 பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணல்

2 நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்

3 மனித உரிமைகள் ஆணைக்குழு

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணல்

03 பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணல் என்றால் என்ன? அதற்காக பயன்படும் கட்டளைச்சட்டம் எது?

தொழிலாளருக்கும் தொழில் வழங்குனருக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளை சட்டத்திற்குட்பட்ட வகையில் தீர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

1950ஆம் ஆண்டின் தொழில் பிரச்சினைக் கட்டளைச்சட்டம்

04 பேச்சு வார்த்தையின் இரு வகைகளும் எவை?

1 சுயமாக முன்வந்து பேச்சுவார்த்தை நடாத்துதல்

2 கட்டாய பேச்சுவார்த்தை நடாத்துதல்

05 சுயமான முன்வந்து பேச்சுவார்த்தை நடாத்துதல் என்றால் என்ன?

இரு தரப்பினரும் தமது சுயவிருப்பின் பேரில் தொழில் ஆணையாளருக்கு அறிவித்து அவரால் குறிப்பிடப்படும் நடுவர் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாகும்.

நா.ஜெயல்வச்சந்திரன்

06 கட்டாய பேச்சுவார்த்தை நடாத்துதல் என்றால் என்ன?

அதிகாரத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பேச்சுவார்த்தை அதாவது தொழில் அமைச்சரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரால் குறிப்பிடப்படும் நடுவர் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாகும்.

பாடவேளை 12

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்/ குறைகேள் அதிகாரி/ஒம்புட்ஸ்மன்

01 இப்பதவி ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணம் யாது?

நிறைவேற்று மற்றம் நிர்வாக நடவடிக்கைகளின் போது பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதலை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டது.

02 இப்பதவி அவ் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டது?

1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு

03 இவரது பிரதான இரண்டு செயற்பாடுகள் வருமாறு

- அனைத்துப் பிரசைகளினதும் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதைத் தடுத்தல்.
- சகல நிர்வாக அநீதிகளிலிருந்தும் பிரசைகளைப் பாதுகாத்தல்.

04 குறைகேள் அதிகாரியை நியமிப்பவர் யார்?

ஜனாதிபதியால்

05 இப்பதவியின் இயல்புகள் எவை?

- இவரது சம்பளம் திரட்டப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.
- 1994ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைப் பிரசைகள் நேரடியாக தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.
- உடல், உள ரீதியில் நல்ல நிலையில் இருக்கும் வரை பணியாற்றலாம்.
- பதவி நீக்குவதாயின் பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி பதவி நீக்க முடியும்.

நா. முல்வேந்திரன்

மனித உரிமைகள் ஆணைக்குழு

06 மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட கட்டளைச் சட்டம் எது?

1996ஆம் ஆண்டின் 21ம் இலக்க கட்டளைச் சட்டம்

07 இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை

20

08 இதன் உறுப்பினர்களை நியமிப்பவர் யார்?

ஜனாதிபதி

09 மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகள் எவை?

- மனித உரிமைகள் தொடர்பாகப் பொதுமக்களை அறிவூட்டுதல்
- அடிப்படை உரிமை தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்.
- மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்தலும் தீர்ப்புக்களை வழங்குதலும்.
- மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நிறைவேற்றுத் துறையினது நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

10 மனித உரிமை ஆணைக்குழுவிற்குரிய அதிகாரங்கள் எவை

- மனித உரிமை மீறல்களை விசாரணை செய்தலும் அது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடுதலும்
- மனித உரிமைகள் தொடர்பான உப குழுக்களை பிரதேச மட்டத்தில் ஏற்படுத்துதல்
- மனித உரிமைகள் வளர்ச்சிக்கான வேலைத்திட்டங்களை முன்வைத்தல்
- மனித உரிமைகள் மீறப்பட்ட நபருக்கு அது தொடர்பில் நீதியைப் பெற்றுக் கொடுத்தல்.

வா.செல்வச்சந்திரன்

பாடவேளை 13

சட்டத்தின் உயர் தன்மை அல்லது உயரீ தன்மை / சட்டத்தின் ஆட்சி

01 சட்டத்தின் உயர்தன்மை என்பதனுள் அடங்கும் விடயங்கள்

1 சட்டத்தின் முன்னிலையில் சகலரும் சமம்

2 சட்டத்தின் பாதுகாப்பு, நியாயமாக அனைவருக்கும் கிடைத்தல்

3 எவரும் சட்டத்தை விட உயர்வாக இருக்க முடியாது

02 இலங்கையின் உயரிய சட்டம் எது?

அரசியலமைப்புச்சட்டம்

03 சட்டத்தின் உயர் தன்மை தொடர்பாக கருத்துக்கூறியவர்கள் யாவர்

டைசி, ஜீ.மார்ஷல்

04 சட்டத்தின் உயர் தன்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

1 அனைவரும் நாட்டின் சட்டத்திற்கு அடிபணிதல்

2 சுயாதீன நீதிமன்றங்கள் மூலம் அனைவருக்கும் சமமான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குச் செயற்படுதல்

3 பக்கச்சார்பற்ற, உறுதியான, நீதியான பொதுவான சட்டத்தொகுதி ஒன்று காணப்படல்

05 நீதியின் உயர்தன்மை உறுதிப்படுத்தப்பட்ட ஒரு சமுகத்தில் காணக்கூடிய பண்புகள் எவை?

1 நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படல்

2 சகல பிரசைகளும் சட்டத்தைப் பற்றிய தெளிவினைப் பெற்றிருத்தல்

3 சட்டம் பற்றிய அறிவின்மையைத் தகுந்த காரணமாக ஏற்றுக்கொள்ளாமை

4 நேர்மையாகவும் தாமதமின்றியும் நீதியைப் பெற்றுக்கொள்ளுதல்

5 சட்டத்தின் முன் சமனாக மதிக்கப்படுதல்

நா.முல்வச்சந்திரன்

பாடவேளை 14

நீதித்துறைச் சுதந்திரம்

01 நீதிமன்றின் சுயாதீனத்தின் முக்கியத்துவங்கள் எவை?

1 புறவாரியான தலையீடுகளின்றி, பக்கச்சார்பின்றி வழக்குத் தீர்ப்புக்களை வழங்குதல்

2 சட்டத்தின் உயர்தன்மையப் பாதுகாத்தல்

3 அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்

4 நீதிமன்று தொடர்பாக பொதுமக்களின் நம்பிக்கையையம் கௌரவத்தையும் உறுதிப்படுத்தல்

02 நீதிமன்ற இலட்சினை எது?

அதீனா தேவதை

03 நீதிமன்றத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்ப 1978ம் ஆண்டு யாப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை? அவற்றை விளக்குக?

1 நீதிபதிகளை நியமனஞ் செய்தல்

2 நீதிபதவிகளைப் பதவி நீக்கம் செய்தல்

3 நீதிபதிகளின் வேதனம்

4 வேறு பதவிகள் ஏற்றல்

5 நீதிச்சேவை ஆணைக்குழுவை அமைத்தல்

(விளக்கம் எழுதுவதற்கு இடமளித்தல் வேண்டும்)

பாடவேளை 15

01 தாமதமின்றியும் பக்கச்சார்பின்றியும் நீதியை நிலைநாட்டுவதன் முக்கியத்துவங்கள் எவை?

1 தனிநபர்களுக்கிடையே நீதிமன்றத்தொகுதி மற்றும் சட்டம் பற்றிய நம்பிக்கையற்றுப் போதல்

தா.செல்வச்சந்திரன்

2 நீதிக்குப் பதிலாக அநீதி முன்னிலை வகித்தல்

3 நாட்டினுள் குற்றங்களும் ஊழல்களும் பெருகுதல்

4 நாட்டில் சட்டத்தின் சமநிலையும் நீதியம் சீர்குலைதல்

5 நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு வழிகழள நாடும் சூழ்நிலைகளுக்கு ஆளாதல்.

6 மனிதர்கள் மத்தியில் சட்டமும் நீதியும் மதிப்பிழந்து போதல்

7 நீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நீண்ட காலமும் சிரமமும் பாரிய செலவும் ஏற்படுதல்.

02 சட்டத்தை மதித்து நடக்கும் பிரசையாக வாழ்வதன் முக்கியத்துவங்கள் எவை?

1 மக்கட் சமூகத்தில் சட்டமும் ஒழுங்கம் பாதுகாக்கப்படுதல்

2 உரிமைகள் பாதுகாக்கப்படுதல்

3 தமது சுயகௌரவமும் நன்மதிப்பும் வளர்ச்சியடைதல்

4 அமைதியான சகவாழ்வு ஏற்படுதல்

5 ஏனையோரின் கௌரவத்திற்கும் மதிப்புக்கும் ஆளாதல்

அலகு 02

அரசின் வெவ்வேறு படிநிலைகள்

(பாடவேளை 15)

பாடவேளை 01

01 இன்று இலங்கையில் இடம்பெறும் ஆட்சி எத்தகையது?

ஒற்றையாட்சி முறை

02 ஒற்றையாட்சி முறை என்றால் என்ன?

ஏ.வி டைசி – ஒரு மத்திய அதிகார நிறுவனம் மாத்திரம் சட்டமியற்றல் தொடர்பில் உயர் அதிகாரத்தைப் பெற்றிருப்பது ஒற்றையாட்சி முறையின் அடிப்படைப் பண்பாகும்.

சீ.என்.ஸ்ட்ரோன்க் - ஒற்றையாட்சி முறையின் அடிப்படைப் பண்புகள் இரண்டாகும். அவை

1 மத்திய அரசின் உயர் தன்மை

2 மேலதிக சுயாதீன நிறுவனங்கள் ஆட்சி முறையில் காணப்படாமை

நா.செல்வச்சந்திரன்

03 ஒற்றையாட்சி நாடுகளுக்கு உதாரணம் தருக?

அபிவிருத்தி அடைந்த நாடுகள் - ஐக்கிய இராச்சியம், ஜப்பான், பிரான்ஸ்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் - பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம்

04 புராதன காலத்தில் மத்திய ஆட்சி தவிர காணப்பட்ட பிரதேச நிர்வாக அலகுகள் எவை?

1 உத்தரதேசம் (வடக்கு)

2 பிராச்சீன தேசம் (கிழக்கு)

3 தக்கிணதேசம் (தெற்கு)

4 பஸ்ஸிமதேசம் (மேற்கு)

05 அனுராதபுர கால்தின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட நிர்வாக அலகுகள் எவை?

இராசரட்டை, உருகுணைரட்டை, மலையகரட்டை, தக்கிணதேசம்

06 பொலநறுவைக் காலத்தில் காணப்பட்ட நிர்வாக அலகுகள் எவை?

இராசரட்டை, தக்கியதேசம், தொலஸ்தஹஸ்ரட்டை, அட்டதஹஸ்ரட்டை

பிரித்தானியர் ஆட்சிக்காலம்

07 பிரித்தானியர் காலத்தில் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்

1 1833 கோல்புறுக் கமரன் சீர்திருத்தம்

1 சட்டவாக்கக் கழகமும், நிறைவேற்று அதிகாரசபையும் உருவாக்கப்பட்டது

2 சட்டவாக்கக்கிகம் 15 ➔ உத்தியோக சார்பு 09,
உத்தியோக சார்பற்றோர் 06

3 உத்தியோக சார்பற்றோர் 06 ➔ஐரோப்பியர் 3
சிங்களவர் 1
தமிழர் 1
பறங்கியர் 1

நா.செல்வச்சந்திரன்

2 1910 குறூ மக்கலம் சீர்திருத்தம்

1 சட்டவாக்கக் கழகம் 21 ➔ உத்தியோக சார்பு 11
உத்தியோக சார்பற்றோர் 10

2 உத்தியோக சார்பற்றோர் 10 ➔ வாக்குரிமை மூலம் 4
நியமனம் மூலம் 6

3 வாக்குரிமை மூலம் 4 ➔ கல்வி கற்ற இலங்கையர் 1
ஐரோப்பியர் 2
பறங்கியர் 1

4 நியமனம் மூலம் 6 ➔ கரையோரச் சிங்களவர் 2
கண்டிச் சிங்களவர் 1
தமிழர் 2
முஸ்லிம் 1

3 1921 மனிங் யாப்புச் சீர்திருத்தம்

1 சட்டவாக்கக் கழகம் 37 ➔ உத்தியோக சார்பு 14

உத்தியோக சார்பற்றோர் 23

2 உத்தியோக சார்பு 14 ➔ பதவி வழியாக 5

ஆளுநர் நியமனம் 9

3 உத்தியோக சார்பற்றோர் 23 ➔ வாக்குரிமை மூலம் 16

நியமனம் மூலம் 7

4 வாக்குரிமை மூலம் 16 ➔ இனவாரி தொழில் ரீதியாக 5

மாகாண தேர்தல் தொகுதி 11

5 இனவாரி தொழில் ரீதியாக 5 ➔ ஐரோப்பியர் 2

பறங்கியர் 1

வர்த்தக சபை 1

கீழ்நாட்டு உற்பத்தியாளர் சங்கம் 1

நா.செல்வச்சந்திரன்

6 மாகாண தேர்தல் தொகுதி 11 ➔ கொழும்பு 1

மேல் மாகாணம் 2

ஏனைய மாகாணங்கள் 8

7 நியமனம் மூலம் 7 ➔ கண்டிச் சிங்களவர் 2

முஸ்லிம் 1

இந்தியத் தமிழர் 1

சிறப்பு 3

4 1931 டொனமூர் யாப்புச் சீர்திருத்தம்

1 அரசுக்கழகம் 61 ➔ மாகாண தேர்தல் தொகுதி 50

அரச அதிகாரிகள் 3

ஆளுநர் நியமனம் 8

2 அரச அதிகாரிகள் 3 ➔ அரச செயலாளர்

நிதிச் செயலாளர்

நீதிச் செயலாளர்

3 இவ் யாப்பு மூலம் உள்நாட்டு அரசியல் நிர்வாகத்தில் பெரும்பகுதி ஒப்படைக்கப்பட்டது

4 இவ்யாப்பின் முக்கிய சிபாரிசுகள் வருமாறு

1 சர்வஜன வாக்குரிமை

2 பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்

3 நிர்வாகக்குழுமுறை

4 அரசுக்கழகம்

நா.செல்வச்சந்திரன்

5 1947ம் ஆண்டு சோல்பரி யாப்புச் சீர்திருத்தம்

1 இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் ➔ பிரதிநிதிகள் சபை

(கீழ் சபை) 101

செனட்சபை

(மேல் சபை) 30

2 பிரதிநிதிகள் சபை 101 ➔ தேர்தல் மூலம் 95

ஆளுநர் நாயகம் மூலம் 6

3 செனட்சபை 30 ➔ பிரதமர் ஆலோசனையுடன் ஆளுநர் நாயகம் மூலம் 15

பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் மூலம் 15

4 இவ்யாப்பு மூலம் மந்திரிசபை(கெபினட்) ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது

5 பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் செயற்பட்டார்

6 இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாகப் பிரித்தானியாவின் பிரிவுக் கவுன்சில் (கோமறைக் கழகம்) ஏற்றுக்கொள்ளப்பட்டது

7 அரச சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு என்பன ஏற்படுத்தப்பட்டன

8 சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக யாப்பின் 29ஆம் சரத்து சேர்க்கப்பட்டது.

பாடவேளை 02

சுதந்திரத்தின் பின்னரான காலம்

6 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு

நா. தெய்வேந்திரன்

1 இலங்கை சுதந்திரமும் தன்னாதிக்கமும் இறைமையுமுள்ள குடியரசாக மாறியது

2 ஓரங்க சட்டத்துறைக்கு தேசிய அரசுப் பேரவை எனப் பெயரிடப்பட்டது

3 மகாதேசாதிபதி பதவி நீக்கப்பட்டு பெயரளவு ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட்டது

4 இறுதி மேன்மறையீட்டு நீதிமன்றமாக இலங்கை உயர் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளல்

5 அரசாங்க சேவை ஆலோசனைச்சபை, அரசாங்க சேவை ஒழுக்காற்றுசபை, நீதிச் சேவை ஆலோசனைச்சபை, நீதிச்சேவை ஒழுக்காற்றுசபை என்பன அமைக்கப்பட்டன.

6 முதன் முதலில் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயம் சேர்க்கப்பட்டமை

7 அரசியலமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

7 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு

1 இலங்கை சனநாயக சோசலிச குயடிரசாக மாற்றப்பட்டது

2 நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி பதவி ஏற்படுத்தப்பட்டது

3 நிறைவேற்று சனாதிபதி தலைமையிலான பிரதமர், மந்திரிசபை அறிமுகம்

4 விகிதாசார பிரதிநிதித்துவமறை அறிமுகம்

5 தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் 196பேரையும், தேசியப் பட்யடில் மூலம் தெரிவு செய்யப்படும் 29 பேரையும் உள்ளடக்கி 225 பேரைக் கொண்ட பாராளுமன்றம் அறிமுகம்

6 அரச சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு அமைக்கப்படல்

7 அடிப்படை உரிமைகள் விரிவாகக் கூறப்பட்டு அவற்றைப் பாதுகாப்பதற்கு ஒழங்குகள் செய்யப்பட்டமை

8 அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாகச் செயற்படுவதற்காக நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் பதவி ஏற்படுத்தப்பட்டது

நா. தெய்வச்சந்திரன்

குறிப்பு : இலங்கையில் உள்ள மாகாணங்களையும் மாவட்டங்களையும் குறிப்பிடுக.

பாடவேளை 03

பிரதேச அலகுகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதற்கான காரணங்களும் அவற்றினால் ஏற்படும் பிரச்சினைகளும்

01 பிரதேச அலகுகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 ஒற்றையாட்சி முறையின் கீழ் மாகாண மட்டத்தில் மக்களுக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2 மாகாண மட்டத்தில் பல்வேறு இனக் குழுக்கள் மூலம் மொமி மற்றும் கலாசாரத்தின் தனித்துவம் உறுதிப்படுத்தப்படுகிறது

3 பிரதேச அபிவிருத்தியை துரிதப்படுத்தல்

4 பிரதேசத்தின் வளங்களை இனங்காணலும் அதனை அபிவிருத்திக்காகப் பயன்படுத்தலும்

5 ஆட்சிக் கருமங்களில் பரந்த பங்குபற்றுகையை ஏற்படுத்தல்

6 பிரதேச வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெறுதல்

7 மக்களின் அடிப்படைத்தேவைகளை இலகுவாக நிறைவேற்றல்

8 பொதுமக்களுக்கு மிக நெருக்கமான நிர்வாக அலகுகளைத் தாபித்தல்

9 மத்திய அரசின் கருமங்களை இலகுபடுத்தல்

10 பிரதேச இளைஞர்களுக்கு கூடுதலான தலைமைத்துவச் சந்தர்ப்பத்தை வழங்குதல்

02 பிரதேச அலகுகளுக்கு அதிகாரத்தை பரவலாக்கலின் போது ஏற்படும் பிரச்சினைகள் எவை?

1 அந்தந்த பிரதேச வசமுள்ள வளங்களுக்கு இடையிலான வேறுபாடுகளின் காரணமாக ஏற்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்கள்

நா. வேல்வச்சாதிரன்

2 பிரதேச நிர்வாக அலகுகளின் செயற்பாடு, பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அணுக வேண்டிய முறை பற்றிய விளக்கமின்மை

3 அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பில் மத்திய அரசுக்கம், பிரதேச அலகுகளுக்கும் இடையில் பிரச்சினைகள் தோன்றுதல்

4 அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாகாணசபைகளுக்கும் உள்ளுராட்சி மன்றங்களுக்கும் போதியளவு அதிகாரங்கள் வழங்கப்படாமை

5 அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதியை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம்

6 பல நிறுவனங்கள் ஒரே பணியில் ஈடுபடும் போது அந்நிறுவனங்களின் பொறுப்புக்கூறலில் ஏற்படும் பிரச்சினைகள்

பாடவேளை 04

01 இலங்கையின் மத்திய அரசின் பிரிவுகள் எவை?

1 சட்டத்துறை – பாராளுமன்றம்

2 நிறைவேற்றுத்துறை – நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் அமைச்சரவையும்

3 நீதித்துறை – உயர் நீதிமன்றங்கள் உள்ளிட்ட நீதிமன்றத் தொகுதி

02 நிறைவேற்றுத்துறையின் பணிகள் எவை?

1 அரசாங்க சேவை நிர்வாகம்

2 அரசாங்க பாதுகாப்புச் செயற்பாடுகள்

3 வெளிநாட்டு விவகாரம் தொடர்பான பணிகள்

4 ஆணைகளையும் கட்டளைகளையும் பிறப்பித்தல்

நா.செல்வச்சந்திரன்

03 சட்டத்துறையின் பணிகள் எவை?

1 நிறைவேற்றுத்துறைக்குத் தேவையான பெரும்பான்மையை வழங்குதல்

2 வரவு செலவுத்திட்ட நிர்வாகம், நிதி நிர்வாகம்

3 குறைகளை முன்வைத்தல்

4 வினாத்தொடுத்தல்

5 அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்தல்

6 சட்டமியற்றல்

7 நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை நிறைவேற்றல்

8 அரசியல் யாப்பு மாற்றங்களுக்கு பங்களிப்புச் செய்தல்

04 நீதித்துறையின் பணிகள் எவை?

1 நீதி விசாரணைகளை மேற்கொள்ளல்

2 நீதியை நிலைநாட்டுதல்

3 ஆலோசனைப்பணிகள்

4 அரசியல் யாப்பைப் பாதகாத்தல்

5 மனித உரிமைகளின் பாதுகாவலனாகச் செயற்படுதல்

6 சட்டத்திற்கு விளக்கமளித்தல்

பாடவேளை 05

ஜனாதிபதியின் அதிகாரங்கள்

01 1978ம் ஆண்ட அரசியல் யாப்பின்படி இலங்கை ஜனாதிபதி எத்தகையவர்?

அரசின் தலைவர், நிறைவேற்றுத்துறையின் தலைவர், முப்படைகளின் தளபதியும், அரசாங்கத்தின் தலைவராகவும் செயற்படுவார்

நாகேஸ்வரி

02 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் எத்தனையாவது உறுப்புரையில் ‘‘இலங்கைக் குடியரசின் ஜனாதிபதி என்பவர் அரசின் தலைவரும் நிறைவேற்றுத்துறையின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஆயுதமேந்திய படைகளின் தலைவருமாவார் ‘‘ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

30.1 ஆம் உறுப்புரையில்

03 ஜனாதிபதியின் சட்டத்துறை அதிகாரங்கள் எவை?

1 பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல்

2 பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தல்

3 விசேட கூட்டங்களுக்கான மசோதாக்களை பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடுதல்

உதாரணம்

- ♠ அமைச்சரவையில் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்கு விடுவதாக தீர்மானிக்கப்பட்ட விடயங்கள்.
- ♠ அரசியல் யாப்பின் 1,2,3,6,7,8,9,10,11,30(2) மற்றும் 62(2) என்னும் பிரிவுகளில் கொண்டுவரப்படும் மாற்றங்கள்.
- ♠ உயர் நீதிமன்றங்கள், மக்கள் தீர்பு வாக்கெடுப்பின் மூலம் தீர்த்துக்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கிய மசோதாக்கள்.
    - மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் மூலம் வெற்றி பெற்ற மசோதாவை சட்டமாகப் பிறப்பித்தல்.
    - பாராளுமன்றத்தில் உரையாற்றும் பாராளுமன்றத்துக்கு செய்திகளை அனுப்பி வைத்தலும்.

04 அரசின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் எவை?

1 சர்வதேச மட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தல்.

2 சர்வதேச உடன்படிக்கையை மேற்கொள்ளல்

3 அரச வைபவங்களுக்கு தலைமை தாங்குதல்

4 வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தலும் அங்கிகரித்தலும்

5 அரச முத்திரையைப் பாதுகாத்தல்

செல்லச்சந்திரன்

05 நிறைவேற்றுத்துறையின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் எவை

1 அரச கொள்கையை நடைமுறைப்படுத்தல்

2 அரச கொள்கையை கட்டுப்படுத்தல்

3 அரச சேவை உயர் அதிகாரிகளை நியமித்தல்

4 முப்படைகளுக்கு தலைமை தாங்குதல்

5 போரையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தல்

06 ஜனாதிபதியின் நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

1 குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்

2 உயர் நீதிமன்றத்தின் நீதிபதி உட்பட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்

பாடவேளை 06

1978 சட்டத்துறை (பாராளுமன்றம்)

01 இரண்டாம் குடியரசு யாப்பில் நட்டத்துறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

பாராளுமன்றம்

02 பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

225

03 225 பாராளமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு தெரிவு செய்யப்படுவர்?

22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் வாக்களார் மூலம் 196 பேரும்,

தேசியப் பட்டியல் மூலம் 29 பேரும்

04 பாராளுமன்றத்தின் பதவிக்காலம் எவ்வளவு?

5 வருடங்கள்

05 பாராளுமனற்றத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் யாவர்?

நா.செல்வச்சந்திரன்

சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித்தலைவர்

06 பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் எவை?

(சட்டத்துறையின் பணிகள் இங்கும் வரும்)

07 நீதிமன்றங்களால் ஆற்றப்படும் பணிகள் எவை?

1 சட்டத்திற்க விளக்கமளித்தல்.

2 வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுதல், நீதியை நிலை நாட்டுதல்.

3 மனித உரிமையைப் பாதுகாத்தல்.

4 அரசியல் யாப்பைப் பாதுகாத்தல்.

5 சட்ட உருவாக்கத்திற்கான ஆலோசனைகளை வழங்குதல்,

6 மாகாண சபைகள், உள்ளுராட்சி மன்றங்கள், மத்திய அரசாங்கம் என்பவற்றுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்தல்

பாடவேளை 07

பிரிவினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்

01 இலங்கையில் அதிகாரப் பிரிவினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவை?

1 1928 – டொனமூர் ஆணைக்குழு அறிக்கை

2 1945 – சோல்பரி ஆணைக்குழு அறிக்கை

3 1957 – பண்டா – செல்வா ஒப்பந்தம் (ரட்ட சபைகள்)

4 1965 – டட்லி – செல்வா ஒப்பந்தம் (மாவட்ட சபைகள்)

5 1980 – மாவட்ட அபிவிருத்திச்சபைகள்

பாடவேளை 08

மாகாணசபைகளின் உருவாக்கம்

01 இலங்கையில் மாகாணசகைள் உருவகாக்கப் பயன்படுத்தப்பட்ட கட்டளைச்சட்டங்கள் எவை?

வா.செல்வச்சந்திரன்

1 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 13வது சீர்திருத்தம்

2 1987ம் ஆண்டின் 42ம் இலக்க மாகாணசபைக் கட்டளைச்சட்டம்

02 இலங்கையில் தற்போதுள்ள மாகாணசபைகளின் எண்ணிக்கை யாது?

09 (1978 ஆண் ஆண்டு அரசியல் யாப்பின் எட்டாவது உப தலைப்பின் படி)

03 மாகாணசபையின் ஆளுநரை நியமிப்பவர் யார்?

ஜனாதிபதி

04 மாகாணசபை உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுவர்?

மாகாணசபைத் தேர்தல் மூலம் மக்களால்

05 மாகாணசபையில் எத்தனை அமைச்சர்கள் இடம்பெறுவர்?

முதலமைச்சர், மற்றும் நான்கிற்கு மேற்படாத அமைச்சர்கள்

06 மாகாணசபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் மத்திய அரசினால் வழங்கப்பட்டள்ளன?

1 Iஆம் பட்டியல் - மாகாணசபைப்பட்டியல்

2 IIஆம் பட்டியல் - மத்திய அரசுப்பட்டியல்

3 III ஆம் பட்டியல் - ஒருங்கிணைந்த பட்டியல்

07 13ஆம் அரசிலமைப்புத் திருத்தத்தின் கீழ் அரச சேவை இரண்டு பகுதிகளைக் கொண்டது அவை?

1 மத்திய அரசின் அரச சேவை 2 மாகாண அரசின் அரச சேவை

08 மாகாண அரச சேவையின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பு எது, அதன் பணிகள் எவை?

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு – அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றல், பதவி உயர்வு வழங்குதல், சேவையிலிருந்து நீக்குதல், ஒழுக்கக் கட்டுப்பாடு

பாடவேளை 09

01 இலங்கையில் தற்போதுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை யாது? 25

02 இலங்கையில் தற்போர்துள்ள நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை யாது? 22

03 இலங்கையில் உள்ள மாகாணங்களையும் அவற்றுள் உள்ளடங்கும் மாவட்டங்களையும் அட்டவணைப்படுத்தி அவற்றை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக.

நாகேஸ்வரசந்திரன்

மாகாணம்	மாவட்டம்
வட மாகாணம்	யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்
கிழக்கு மாகாணம்	திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை
தென் மாகாணம்	காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை
மேல் மாகாணம்	கம்பஹா, கொழும்பு, களுத்துறை
வடமேல் மாகாணம்	குருநாகல், புத்தளம்
மத்திய மாகாணம்	மாத்தளை, கண்டி, நுவரேலியா
வட மத்திய மாகாணம்	அனுராதபுரம், பொலநறுவை
ஊவா மாகாணம்	பதுளை, மொனராகலை
சப்பிரகமுவ மாகாணம்	இரத்தினபுரி, கேகாலை

பாடவேளை 10

உள்ளூராட்சி மன்றங்களின் வளர்ச்சி

01 இலங்கையில் புராதன காலத்தில் உள்ளூராட்சி மன்ற ஆட்சி முறைகள் இடம்பெற்றது என்பதற்கான ஆதாரங்கள் எவை?

1 கமிக, பருமக,காம்போஜக முதலிய தலைவர்களால் கிரமா நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது

2 நகர குத்திகர் என்பவரால் நகர நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது

3 வெவல்கெட்டிய என்னம் கல்வெட்டில் 10 கிராமங்களை ஒரு நிர்வாக அலகாகக் கொண்டு தசகம் என்னும் உள்ளூராட்சிமன்ற முறை காணப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது

4 கண்டி இராச்சிய காலத்தில் நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக 4 மகா திசாவைகளும், 8 திசாவைகளும், 9 ரட்டைடகளும் காணப்பட்டுள்ளன.

5 கிராம சபைகளால் கிராம நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டதாக றொபட்நொக்ஸ் என்பவர் 1681இல் கூறியுள்ளார்.

நா.தேவேச்சந்திரன்

02 இலங்கையில் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் எவை?

1 1865 – மாநகரசபைக் கட்டளைச் சட்டம் - கொழும்பு, காலி, கண்டி

2 1934 – கிராமசபைகள் கட்டளைச்சட்டம்

3 1939 – நகர சபைகள் கட்டளைச்சட்டம்

4 1980 – பட்டினசபைகள், கிராம சபைகள் நீக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச்சபை

5 1987 – பிரதேசசபைகள்

செயற்பாடு :- உள்ளூராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணங்களை பட்டியல்படுத்திக் காட்டுக.

பாடவேளை 11

கட்டமைப்பு

01 இலங்கையில் தற்போது செயற்படும் உள்ளூராட்சி நிறுவனங்களையும் அவற்றிற்று பொறுப்பு வகிப்பவர்களையும் குறிப்பிடுக?

1 மாநகரசபை - நகரபிதா (மேயர்)

2 நகரசபை - தலைவர்(தவிசாளர்)

3 பிரதேசசபை - தலைவர் (தவிசாளர்)

02 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுவர்?

உள்ளூராட்சிசபைத் தேர்தல் மூலம்

03 அவர்களின் பதவிக்காலம் எவ்வளவு?

4 ஆண்டுகள்

04 மாநகரநபைகள் எக்கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டள்ளது?

1947ம் ஆண்டு 16ம் இலக்க மாநாகரசபை கட்டளைச்சட்டம்

நா.தேவேந்திரன்

05 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சர் யார்?

உள்ளூராட்சி அமைச்சர்

06 உள்ளூராட்சி அமைச்சரின் அதிகாரங்கள் எவை?

1 உள்ளூராட்சி நிறுவனங்களைப் பிரகடனப்படத்துவது

2 அவற்றின் எல்லைகளை நிர்ணயிப்பது

3 அதற்குப் பெயரிடுவது

07 மாநகரசபையில் உள்ளடங்குவோர் யார்?

மேயர், பிரதி மேயர், மாநகரசபை உறுப்பினர்கள்

08 மாநகரசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எவை?

1 மாநகர எல்லைக்குள் நீர் விநியோகத்தை மேற்கொள்ளல்

2 மின்சார விநியோகம் செய்தல் 3 குப்பை கூழங்களை அகற்றுதல்

4 புதிய வீதிகளை அமைத்தல் 5 நூல்நிலைய வசதிகளை ஏற்படுத்தல்

09 நகரசபைகள் உருவாக்கப்பயன்பட்ட கட்டளைச்சட்டம் எது?

1939ஆம் ஆண்டு 61ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச்சட்டம்

09 நகரசபையில் உள்ளடங்குவோர் யாவர்?

தவிசாளர், பிரதித் தவிசாளர், நகரசபை உறுப்பினர்கள்

10 பிரதேசசபைகளை உருவாக்குவதற்குப் பயன்படத்தப்பட்ட கட்டளைச்சட்டம் எது?

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க கட்டளைச் சட்டம்

11 பிரதேசசபையின் எல்லை எதனை ஒத்ததாக அமையும்?

பிரதேச செயலகத்தின் எல்லையை

12 பிரதேசசபையில் உள்ளடங்குவோர் யாவர்?

தவிசாளர், பிரதித் தவிசாளர், பிரதேசசபைஉறுப்பினர்கள்

நா.செல்வச்சந்திரன்

03 இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி திறுவனங்களை மாகாண ரீதியில் வகைப்படுத்தி அட்டவணைப்படுத்துக.

மாகாணம்	மாநகர சபை	நகர சபை	பிரதேச சபை	மொத்தம்
வட மாகாணம்	1	5	28	34
வடமேல் மாகாணம்	1	3	29	33
வட மத்திய மாகாணம்	1	00	25	26
மேல் மாகாணம்	7	14	27	48
மத்திய மாகாணம்	4	6	33	43
தென் மாகாணம்	3	4	42	49
கிழக்கு மாகாணம்	3	5	37	45
சப்ரகமுவ மாகாணம்	1	3	25	29
ஊவா மாகாணம்	2	1	25	28
மொத்தம்	**23**	**41**	**271**	**335**

பாடவேளை 12

உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள்

01 உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற மூன்று அடிப்படைப் பணிகளும் எவை?

1 பொதுப்பாதைகள், தெருக்கள்

1 வீதிகள், பாதைகளைப் பாதுகாத்தல்

2 வீதிகள், பாதைகளைப் பராமரித்தல்

3 எல்லைகளைக் குறித்தல்

4 தடைகளை நீக்குதல்

5 நீர்வழிகள், சுத்திகரிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கான குமாய்கள் அமைத்தல்

2 பொதுமக்கள் சுகாதாரம்

1 பொதுவடிகால்களை அமைத்தல், பழுதுபார்த்தல்

2 மலசலகூடங்களை அமைத்தல்

3 கழிவுப்பொருள் அகற்றல்

4 முறையற்ற கட்டடங்களை அப்புறப்படுத்தல்

5 பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்

3 பொதுப்பயன்பாடுச் சேவைகள்

1 பொது இடங்களுக்கு மின்வழங்கல்

2 பொதுச்சந்தைகளை நடத்திச் செல்லல்

3 பூங்காக்கள், சோலைகள், விளையாட்டுத்திடல்களைப் பேணிவருதல்

4 நீர்வழங்கல்

5 பொதுக் குளியல் நிலையங்களை அமைத்தல்

நா.தில்லைச்சந்திரன்

பாடவேளை 13

மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்களால் பெறும் நன்மைகள்

01 மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்களால் ஏற்படும் நன்மைகள் எவை?

1 பொதுமக்களுக்கான சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிதல்

2 பிரதேச ரீதியாகவும், தேசிய ரிதியாகவும் தலைவர்களை உருவாக்கிக்கொள்ள முடிதல்

3 பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பயனுள்ள வகையிலும் துரிதமாகவம் மெற்கொள்ள முடிதல் (வீதிகள், நீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள்)

4 சுகாதார நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளல் (நோய்க்கட்டுப்பாட்டு இயக்கங்கள்)

5 முன்பள்ளி, தாய் சேய் மருத்தவ நிலையங்கள் மூலம் மக்களின் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மெம்படுத்தல்

6 நகரமக்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழிப்பதற்கும் அறிவைப் பெற்றுக்கொள்ளவும் வசதிகளைச் செய்து கொடுத்தல்

(பொதுப்பூங்காக்கள். உடற்பயிற்சி நிலையங்கள், நூலகங்கள், கேடபோர் கூடங்கள்)

நா.முல்வச்சந்திரன்

செயற்பாடு :- உமது பாடசாலை அமைந்தள்ள உள்ளூராட்சி நிறுவன வகையைக் குறிப்பிட்டு அதன் மூலம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைகக் குறிப்பிடுக.

பாடவேளை 14

பிரசைகள் தொடர்பான அரசின் பொறுப்புக்கள்

01 அரசாங்கத்தின் பல்வேறு படிநிலைகளும் எவை?

1 மத்திய அரசாங்கம் 2 மாகாணசபைகள் 3 உள்ளூராட்சி மன்றங்கள்

02 பொறுப்பெற்றல் என்றால் என்ன?

தனக்கு வழங்கப்பட்ட செயற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தலாகும்.

03 பிரசை தொடர்பாக அரசாங்கத்தின் வெவ்வேறு படிநிலைகளின் பொறுப்புக்கள் எவை?

1 பிரதேச மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

2 பிரதேச பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் தேசிய அபிவிருத்தியை ஏற்படுத்தல்

3 தேசத்தின் பெருமையை மேம்படுத்தல்

4 தேசிய மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்தல்

5 சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல்

6 கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாத்தல்

7 சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல்

8 மனித உரிமைகளைப் பாதுகாத்தலும் தலைவர்களை உருவாக்குதலும்.

9 சூழலை முகாமை செய்தலும் சூழலைப் பாதுகாத்தலும்

10 பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தலும், பரிபாலித்தலும், அபிவிருத்தி செய்தலும்

பாடவேளை 15

பிரசைகளின் பொறுப்புக்கள்

01 பொறுப்புக்கூறல் என்றால் என்ன?

பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பிலான கடமையாகும்.

நா. செல்வச்சந்திரன்

02 அரசாங்கத்தின் வெவ்வேறு படிநிலைகளின்பால் பிரசைகளின் பெறுப்புக்கள் எவை?

1 தேசிய பாதுகாப்பைப் பேண துணை புரிதல்

2 நலன்புரி நடவடிக்கைகள் மூலம் உரிய பயன்களைப் பெறுதல்

3 சட்டத்தையும் ஒழுங்கையம் பேண உதவுதல்

4 மோதல்கள் இழிவாகுமாறு நடந்துகொள்ளல்

5 சூழலைப்பாதுகாப்பதற்கு துணைபுரிதல்

6 கல்வி நடவடிக்கைகள் மூலம் பயன்பெறுதல்

7 பண்பாட்டு மரபுரிமைகளைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்தல்

8 வெவ்வேறு மக்களினங்களுக்கும் சமயக் குழுக்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை வளர்க்க பங்களிப்புச் செய்தல்

9 பொதுச்சொத்துக்களை பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்தல்

10 பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முப்படையினருக்கும் பொலிசாருக்கும் உதவுதல்

அலகு 03

மனித உரிமைகளும் கடமைகளும்

பாடவேளை (30 – 01)

மனித உரிமைகள்

01 மனித உரிமைகள் என்றால் என்ன?

ஓவ்வொரு மனிதனுக்கும் மனிதனாகப் பிறந்தமையால் உரித்தாகும் உரிமைகளின் திரட்டே மனித உரிமைகள் எனப்படும்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவசியமான உரிமைகள் அனைத்தும் மனித உரிமைகள் எனப்படும்.

மனித உரிமைகள் என்பது பொது மனிதத் தன்மையாகும்.

02 மனித உரிமைகள் தேவைப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 மனிதன் கௌரவமாக வாழ்வதற்கு வழிவகுற்படுத்தப்படும்.

2 சமாதானம் மற்றும் சமத்துவம் மேலோங்கும்

நா.மலேவச்சந்திரன்

3 சாதி, மதம், ஆண், பெண் என்ற பேதங்களிலிருந்து விடுபடுதல்

4 சனநாயகத்தைக் கட்டியெழுப்புதல்

03 மனித உரிமைகள் கிடைப்பதற்கான அடிப்படைத் தகுதி எது?

மனிதனாகப் பிறத்தல்.

04 மனித உரிமைகளின் அடிப்படைப் பண்புகள் எவை?

சமாதானம், சமத்துவம்

பாடவேளை (30 – 02)

01 மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஒரு சமுகத்தில் காணப்படக்கூடிய அம்சங்கள் எவை?

1 சனநாயகம் மேம்பட்டிருக்கும். 2 பாதுகாப்பு மேம்பட்டிருக்கும்

3 பிரசைகளின் சமுகவாழ்வு மேம்பட்டிருக்கும்

02 உரிமைகளை அடைந்து கொள்வதற்கான சாதகமான சூழ்நிலைகள் எவை?

1 நீதி மேலோங்குதல்

2 நேர்மை மேலோங்குதல்

03 பொது மனிதத் தன்மையில் அடங்குபவை எவை?

1 மனித வாழ்க்கை(சமுக, பொருளாதார, கலாசார உரிமைகள்)

2 மானிட கௌரவம் (குடியியல், அரசியல் உரிமைகள்)

04 அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?

நாட்டின் தேவைகளுடனும் வளங்களுடனும் பொருத்தியமையுமாறு மனித உரிமைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதானமான உரிமைகள், நாட்டின் அரசியல் யாப்பு போன்ற முதன்மையான சட்டங்களுளள் உள்ளடக்கப்படுமாயின் அவை அடிப்படை உரிமை எனப்படும்.

05 அடிப்படை உரிமைகளின் இயல்புகள் எவை?

நா.தேவச்சந்திரன்

1 அரசியல் யாப்பு போன்ற முதன்மையான சட்டங்களில் உள்ளடக்கப்படுதல்

2 உரிமைகளை நுகர்வது தொடர்பாக வரையறைகள் காணப்படும்

‘ 3 மேற்படி உரிமைகள் மீறப்படும்போது சட்ட ரீதியாக பரிகாரம் காணலாம்.

06 இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பில் எத்தனையாவது அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது?

மூன்றாவது அத்தியாயம்

07 அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது எடுக்கப்பட வேண்டிய பரிகாரங்கள் எத்தனையாவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது

126வது உறுப்புரை

செயற்பாடு :- மனித உரிமைகள், அடிப்படை உரிமைகளின் வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

பாடவேளை (30 – 03)

மனித உரிமைகளை வென்றெடுத்த சந்தர்ப்பங்கள்

01 மனித உரிமைகளைப் பெற்றுக்கொள்ளாது மனிதர்கள் வாழ்ந்த யுகங்கள் எவை?

1 அடிமை யுகம்

2 மானியமுறை யுகம்

02 மனித உரிமைகளை வெற்றிகொள்வதற்காக மனிதன் மேற்கொண்ட செயற்பாடுகள் எவை?

1 ஆட்சியாளர்களுக்கு எதிராக போர் செய்தல்.

2 பல்வேறுவிதமான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல்.

3 ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்தல்.

03 மனிதன் தனது உரிமைகளைப் பெற்றுக்கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் எவை?

1 1215 – பிரித்தானியா மக்னாகாட்டா உடன்படிக்கை

நா.செல்வச்சந்திரன்

2 1679 – ஆளுரிமைக்கட்டளை

3 1689 – பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய உடன்படிக்கை

4 1776 – அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்

5 1789 – மனித உரிமைகள் தொடர்பான பிரான்சியப் பிரகடனம்

6 1917 – ரஷியப் புரட்சி

7 1949 – சீனப் புரட்சி

செயற்பாடு :- மேற்படி வரலாற்று சந்தர்ப்பங்களில் வென்றெடுத்த உரிமைகள் சிலவற்றை பட்டியல்படுத்துக.

பாடவேளை (30 – 04)

மனித உரிமைகள் பற்றிப் பேசப்படுவதற்கான காரணங்கள்

01 உரிமையுடன் தொடர்புடைய இரண்டு செயற்பாடுகளும் எவை?

1 உரிமைகளைக் கோருவோர்

2 உரிமைகளைக் பெற்றுக்கொடுக்கக் கடமைப்பட்டோர்

02 மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 இரண்டாம் உலக யுத்தம் போன்று இனியும் அவ்வாறான பேரழிவை நோக்கி உலகம் செல்வதைத் தடுத்தல்.

2 உலக சமாதானத்தை நிலை நிறுத்துதல்

3 மனித உரிமைகள் மற்றும் மனித கௌரவத்தை ஏற்படுத்தல்.

02 முதலாம் உலகப்போர் இடம்பெற்ற காலப்பகுதிகள் எவை?

1914 – 1919

03 இரண்டாம் உலகப்போர் இடம்பெற்ற காலப்பகுதி எது?

1939 – 1945

நா.செல்வமந்திரன்

04 மனித உரிமைகளைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பு எது?

ஐக்கிய நாடுகள் சபை

05 ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்ற ஆண்டு எது?

1945

06 ஐக்கிய நாடுகள் அமைப்பு தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் எவை?

1 உலக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

2 இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தல்.

3 மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

10 ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1948 டிசம்பர் 10

07 மனித உரிமைகளை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் கூறு எது

பொதுச்சபை

08 ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட பிரகடனத்தின் முதலாவது வாசகத்தில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

மனிதனாகப் பிறக்கும் அனைவருமே சுதந்திரத்துடனும் சம உரிமைகளுடனும் மேன்மையுடனுமே பிறக்கின்றனர். இவர்கள் இயல்பாகவே நம்பிக்கையுடனும் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவ உணர்வுடனும் செயற்பட வேண்டியவர்களாவர்.

09 ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எவை?

1 அனைவருக்கும் கிடைக்கும் உரிமைகளைக் குறிப்பிடல்.

2 அவ்வுரிமைகளைப் பயன்படுத்தும்போது ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள் மற்றும் கடமைகள்

செயற்பாடு :- மனித உரிமைகளை பாடசாலை மாணவர்கள் தெரிந்து கொள்வதன் முக்கியத்துவம் பற்றிய செய்தி.

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (30 – 05)

மனித உரிமைகளின் வகைகள்

01 உரிமைகளின் வகைகள் எவை?

1 மனித உரிமைகள்

2 அடிப்படை உரிமைகள்

02 ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட உரிமைகளுள் ஒரு நாட்டின் அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்டால் அவ்வுரிமைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

அடிப்படை உரிமைகள்

03 அனைத்து அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளாகும் (சரி)

04 அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளாகும் (பிழை)

05 மனித உரிமைகளின் பண்புகளுக்கு ஏற்ப அவற்றின் வகைகள் எவை?

1 குடியியல் உரிமைகள் 2 அரசியல் உரிமைகள்

3 பொருளாதார உரிமைகள் 4 சமுக கலாசார உரிமைகள்

பாடவேளை (30 – 06)

மனித உரிமைகள் பிரகடனம்

01 ஐக்கிய நாடுகள் சபையினால் 1948இல் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பிரகடனம் எத்தனை உறுப்புரைகளைக் கொண்டது?

30

02 அவ் உறுப்புரைகளின் அமைப்பு முறையைத் தருக?

முகவுரை :- இது மனித உரிமைகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

சரத்து 1 – 2 :- மனித உரிமைகளின் இயல்பை வலியுறுத்துகின்றது.

சரத்து 3 – 26 :- பல்வேறு உரிமைகளையும் அட்டவணைப்படுத்தியுள்ளது

சரத்து 27 – 30 :- பல்வேறு உரிமைகள் தொடர்பான கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

நா.செல்வச்சந்திரன்

03 மனித உரிமைகள் பிரகடனத்தில் இடம்பெறும் உரிமைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

1 உயிர் வாழவும் சிந்திக்கவும் சுய பாதுகாப்புக்குமான உரிமை

2 எவரும் சித்திவைதைகளுக்கோ, கொடூரத்திற்கோ, மனிதாபிமானமற்ற தண்டனைகளுக்கோ உட்பாடதிருக்கும் உரிமை

3 கருத்து வெளியிடுவதற்கும் தகவல் வழங்குவதற்கும், தகவல்களைப் பெறுவதற்குமான உரிமை

4 ஓய்விற்கும் உல்லாசத்திற்கும் உரிமையுண்டு

5 தொழில் புரியவும் நியாயமான ஊதியம் பெறவும் உரிமையுண்டு

04 மனித உரிமைகளின் வகைகள் எவை?

1 குடியியல், அரசியல் உரிமைகள்

2 பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள்

05 குடியியல், அரசியல் உரிமைகள் எவை?

1 உயிர்வாழவும் சுதந்திரமாகச் சிந்திக்கவும் தனிப்பட்ட பாதுகாப்பிற்குமான உரிமை

2 சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் எனும் உரிமை

3 நியாயமான வழக்கு விசாரணைக்கான உரிமை

4 நேரடியாகவோ, பிரதிநிதி மூலமாகவோ அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை

5 போக்குவரத்து செய்வதற்கான உரிமை

06 பொருளாதார, சமுக, கலாசார உரிமைகள் எவை?

நா.முரளிவச்சரன்

1 கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை

2 தொழில் செய்வதற்கான உரிமை, வேலைக்கேற்ற ஊதியம் பெறும் உரிமை

3 சமுகப் பாதுகாப்பிற்கான உரிமை

4 தனிப்பட்ட சொத்துக்களை வைத்திருப்பதற்கான உரிமை

5 கலாசார, விஞ்ஞான, கலை சம்பந்தமான அம்சங்களில் ஈடுபடுவதற்கான உரிமை

பாடவேளை (30 – 07)

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம்

01 ஐக்கிய நாடுகள் சபையால் 1966இல் வெளியிடப்பட்ட இரு உடன்படிக்கைகளும் எவை?

1 பொருளாதார, சமுக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு (ICESCR)

2 குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு(ICCPR)

02 1966இல் வெளியிடப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனத்தில் கூறப்பட்டள்ள உரிமைகள் எவை?

1 வாழ்வதற்கான உரிமை

2 நீதியற்ற முறையில் கைது செய்வதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை

3 சட்டத்தின் முன் மனிதனாக ஏற்றுக்கொள்வதற்கான உரிமை

4 சமய வழிபாட்டிற்கான உரிமை

5 தேர்தலின் போது வாக்களிப்பதற்கான உரிமை

நா.செல்வச்சந்திரன்

03 1989இல் வெளியிடப்பட்ட குடியியல், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டின் இரு விருப்பத்திற்குரிய ஒப்பந்தங்களும் எவை?

1 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பத்திற்குரிய பின்னேடு

- இது 14 உறுப்புரைகளைக் கொண்டது
- இதன்படி மனித உரிமை மீறப்பட்டால் அதற்கான நியாயம் அந்த நாட்டில் கிடைக்காதவிடத்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.
- இதற்கு அந்த நாடு இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருத்தல் வேண்டும்.
- இலங்கை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

2 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்துடன் இணைந்த இரண்டாவது விருப்பத்திற்குரிய பின்னேடு (மரண தண்டனையை நீக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டது)

- இது 11 வாசகங்களைக் கொண்டது
- 1989 டிசம்பர் 15 இல் நிறைவேற்றப்பட்டது
- இதில் கையெழுத்திட்ட நாடுகள் எந்தவொரு குற்றத்திற்காகவும் மரணதண்டனை விதிக்க முடியாது
- இதில் இலங்கை கையெழுத்திடவில்லை

பாடவேளை (30 – 08)

பொருளாதார, சமூக பண்பாட்டு உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம்

01 பொருளாதார, சமுக , கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் இடம்பெறும் உரிமைகள் எவை?

1 கல்வியைப் பெறுவதற்கான உரிமை

2 சுகாதாரனமான வாழ்க்கை நடாத்துவதற்கான உரிமை

நா.தேவச்சந்திரன்

3 சுதந்திரமாகத் தொழில் ஒன்றைத் தெரிவு செய்யம் உரிமை

4 நியாயமான சம்பளம் பெறும் உரிமை

5 தொழிற்சங்கங்களை ஆரம்பிப்பதற்கும் அவற்றில் இணைவதற்குமான உரிமை

03 பொருளாதார, சமுக, கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதெச உடன்படிக்கை உள்ளடங்கிய உரிமைகளை மேலும் உறுதிப்படுத்துவதற்காக அது தொடர்பான விருப்பத்திற்குரிய உடன்பாடு கையெழுத்திடப்பட்ட ஆண்டு எது?

2008

04 சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் ஆறும் எவை?

1 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனம் (1948)

2 பொருளாதார, சமுக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு (ICESCR)

3 குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு(ICCPR)

4 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பத்திற்குரிய பின்னேடு

5 குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தத்துடன் இணைந்த இரண்டாவது விருப்பத்திற்குரிய பின்னேடு

6 பொருளாதார, சமுக, கலாசார உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையில் காணப்படும் விருப்பத்திற்குரிய உடன்படிக்கை

பாடவேளை (30 – 09)

நா.செல்வச்சந்திரன்

பெண்களுக்கு எதிரான சகல பாரபட்சங்களையும் ஒழித்தல் தொடர்பான சமவாயம்

01 சமுகமொன்றின் மிகச்சிறிய அலகு எது?

குடும்பம்

02 ஒரு குடும்பத்திற்கு தாயினால் வழங்கப்படும் சேவைகள் எவை?

1 பிள்ளைகளைப் பெற்றெடுத்தல்

2 அவர்களைப் பராமரித்த வளர்த்தல்

3 அவர்களைப் பாதுகாத்தல்

4 உணவுகளையும் ஊட்டங்களையும் வழங்குதல்

5 கல்வியைப் பெற்றுக்கொடுத்தல்

03 கி.பி 6ம் நூற்றாண்டில் பெண்கள் சம்பந்தமான கொள்கைகளை உருவாக்கிய அரச குடும்பம் எது அவ்விரு கொள்கைகளும் எவை?

லிச்சவி

1 திருமணமாகாத இளம் பெண்களைப் பாதுகாத்தல்

2 திருமணமான பெண்களைப் பாதுகாத்தல்

04 பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எவை?

1 கொடுமைகளுக்கு ஆளாதல்

2 பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படல்

3 முறைகேடாக நடத்தப்படல்

05 ஐக்கிய நாடுகள் சபையினால் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை எது?

பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW)

நா.செல்வச்சந்திரன்

06 இவ் உடன்படிக்கை உருவாக்கப்பட்ட ஆண்டு எது? 1979 டிசம்பர் 18

07 இவ் உடன்படிக்கை மூலம் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் எவை?

1 குடும்ப அலகினுள்ளே பெண்களின் உரிமை

2 கல்வியும், பயிற்சியும் பெறுவதற்கான உரிமை

3 பொருளாதாரத்திற்கும் அதன் பிரதிபலன்களைப் பெறுவதற்குமான உரிமை

4 சுகாதாரப் பாதுகாப்பிற்கும் போஷாக்கிற்குமான உரிமை

5 சமுக முரண்பாடுகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்குமான உரிமை

08 அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் நீதியின் முன் ஆண், பெண் சமத்துவ நிலையினை ஏற்படுத்துதல் எத்தனையாவது உறுப்புரையில் கூறப்பட்டுள்ளது?

15

09 அரசினால் வழங்கப்படும் கல்வி முறையினை ஆண்களுடன் சம உரிமையுடன் பெண்களும் பெறுவதுடன் பாரபட்சங்களை வெளிப்படுத்தும் சகல வழிகளையும் இல்லாதொழித்தல் எத்தனையாவது உறுப்புரையில் கூறப்பட்டுள்ளது. 10

10 இலங்கை இவ் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஆண்டு எது? 1981

11 பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் எவை?

1 1993இல் இலங்கையில் பெண்கள் பிரகடனம் வெளியிடப்பட்டமை

2 பெண்களுக்கென மகளிர் அமைச்சு ஏற்படுத்தியமை

3 பெண்களுக்கு எதிராக ஏற்படும் வேறுபாடுகள் தொடர்பாக விசாரணை செய்ய தேசிய மாதர் குழு அமைக்கப்பட்டமை

4 அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்களுக்குரிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக சிறுவர், பெண்கள் அலகொன்றை ஏற்படுத்தியமை

12 சிடொ தொடர்பான விருப்பத்திற்குரிய உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட ஆண்டு எது?

நா.செல்வச்சந்திரன்

1999

பாடவேளை (30 – 10)

சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம்

01 சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

1 சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்

2 அவர்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்துதல்

3 சிறுவர்களை போராளிகளாகப் பயன்படுத்தல்

4 பாடசாலைக் கல்வியை மறுத்தல்

5 பல்வேறு கொடுமைகளுக்கு உட்படுத்தல்

02 யுத்தங்களினால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

1 அநாதைகளாதல்

2 மரணித்தல்

3 மந்தபோசனை குறைபாட்டை அடைதல்

4 பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகுதல்

03 ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர் உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1989 நவம்பர் 20

04 இவ் உடன்படிக்கை செயற்படத் தொடங்கிய அண்டு எது?

1991 (இலங்கையும் இந்த ஆண்டிலேயே கையெழுத்திட்டது)

05 சிறுவர் உரிமைகள் பிரனடத்தை வெளியிடும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட பிரகடனங்கள் எவை?

நா.கலைவச்சந்திரன்

1 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனம்

2 1924 சிறுவர் உரிமைகள் தொடர்பான ஜெனிவாப் பிரகடனம்

06 ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் எத்தனை உறுப்புரைகளைக் கொண்டது? 54 உறுப்புரை

07 சிறுவர் சமவாயத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ள விடயங்கள் எவை?

1 சிறுவர் பாதுகாப்பு 2 பங்குகொள்ளல்

3 உயிர்வாழ்தல் 4 அபிவிருத்தி

08 சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட நியதிகள் எவை?

1 சிறுவர்களின் நலன் 2 உயிர் வாழ்தலும், வாழ்வதற்குமான உரிமையும்

3 பங்கு கொள்ளலம் விருத்தியும் 4 பாகுபாடின்றி நோக்கல்

09 சமவாயத்தின் முக்கிய உறுப்புரைகள் எவை?

உறுப்புரை 1:- 18 வயதுக்குக் குறைந்தோர் பிள்ளைகள் அல்லது சிறுவர்கள் ஆவர்.

உறுப்புரை 2:- சிறுவர்கள் என்ற வகையில் எந்த பாகுபாடுமின்றி சிறுவர் சமவாயத்தைப் பின்பற்றல் வேண்டும்.

உறுப்புரை 3:- பிள்ளைகள் தொடர்பாகச் செயற்படும்போதும் தீர்மானங்கள் எடுக்கும் போதும் பிள்ளைகளுடைய நலன்களைக் கருதுதல் வேண்டும்.

உறுப்புரை 6:- வாழ்வதற்கான எரிமைகள் அனைத்து பிரசைகளுக்கும் உண்டு என்று அரசாங்கம் ஏற்றுக்கொள்வதோடு பிள்ளைகளின் வாழ்வதற்கான உரிமையை மதிப்பது அனைவரினதும் கடமையாகும்.

உறுப்புரை 7:- குழந்தை பிறந்ததும் பதிவு செய்யப்படுதல் வேண்டும். தனக்கென தேசியத்துவத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும் பிறப்பிலிருந்து பெயரொன்றை உரித்தாக்கிக் கொள்ளும் உரிமையும், இனம் ஒன்றினை அடையாளப்படுத்திக்கொள்ளம் உரிமையும்.

நா. வேல்வச்சுதன்

உறுப்புரை 35 :- பிள்ளைகளை விற்பனை செய்தல், பரிவர்த்தனை செய்தல் அல்லது கடத்திச் செல்லதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

உறுப்புரை 28 :- கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை அனைத்துச் சிறுவர்களுக்கும் உண்டு. ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்தும் அதனை இலவசமாகப் பெற்றுக் கொடுத்தலும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

10 சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகள் எவை?

1 கருத்து வெளிப்பாட்டு உரிமை

2 சிந்தனை செய்யம் உரிமை, மத நம்பிக்கை பற்றிய உரிமை

3 ஒன்று கூடுவதற்கான உரிமை

4 தனித்துவத்தைப் பேணும் உரிமை

5 தகவல் சேகரிக்கும் உரிமை

11 சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் படி அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் எவை?

1 சிறுவர் மேம்பாட்டை உறதிப்படுத்தல்

2 குடும்ப உறவுகளை வலுப்படுத்தல்

3 சிதைந்த குடும்ப சிறுவர்களைப் பாதுகாத்தல்

4 அகதிகளான சிறுவர்களைப் பேணுதல்

5 சமுகப் பாதுகாப்பினை பெற்றுக்கொடுத்தல்

நா.தேவகுமாரன்

12 சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை?

1 ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்தை ஏற்று நடைமுறைப்படுத்தல்

2 இலங்கையின் நீதி நிர்வாகத்தினை சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்திற்கு இணங்க வைத்தல்

3 சிறுவர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேசிய சிறுவர் அதிகாரசபையைத் தாபித்து செயற்படுத்துவதோடு அதிகாரத்தைப் பிரயோகித்தல்

4 சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்ட்டுள்ளமை

5 அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்களுக்குரிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக சிறுவர், பெண்கள் அலகொன்றை ஏற்படுத்தியமை

பாடவேளை (30 – 11)

விசேட தேவையுடையோர், ஆதிவாசிகள், தொழிலாளர், முதியோர் உரிமைகள்

01 விசேட தேவையுடையோர் எனப்படுவோர் யார்?

உடல் ரீதியாக, உள ரீதியாக, அறிவு ரீதியாக மற்றும் வேறு வகையில் மாற்றுத்திறன் உடையோர்

02 விசேட தேவையுடையோரின் உரிமையைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை உறுதி செய்த ஆண்டு எது?

2006

03 ஆதிவாசிகளது கலாசாரத்திற்கு உதாரணங்கள் தருக?

உணவு. ஆடையணிகள், மொழி, பண்பாடு, பழக்கவழக்கம்

04 ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாக்க உலக தொழிலாளர் அமையத்தினால் 1989இல் அமைக்கப்பட்ட அமைப்பு எது?

ஆதிவாசிகள் மற்றம் பழங்குடிகள் மக்கள் சங்கம்

நா.செல்வமந்திரன்

05 இலங்கையில் வாழும் ஆதிவாசிகள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

வேடுவர் சங்கம்

06 இலங்கையில் ஓய்வு பெறும் வயதெல்லை யாது?

57 – 60

07 தேசிய மட்டத்தில் முதியோரது உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

2000

08 சர்வதேச தொழிலாளர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?

1919

09 சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனமாகச் செயற்படத் தொடங்கிய ஆண்டு எது? 1946

10 இலங்கை சர்வதேச தொழிலாளர் அமைப்பில் அங்கத்துவம் பெற்ற ஆண்டு எது?

1948

11 தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்கும் சட்டங்கள் எவை?

1 கடை காரியாலயச் சட்டம்

2 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவி உபகாரச் சட்டம்

3 தொழிற்சாலைச் சட்டம்

4 ஊதிய கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம்

12 தொழிலாளர்களின் உரிமைகள் எவை?

1 உரிய ஊதியம்

2 விடுமுறை

3 தொழில் பாதுகாப்பு

4 சமுகப் பாதுகாப்பு

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (30 – 12)

சுற்றாடல் தொடர்பான கடமை மனிதர்களின் கடமைகள்

01 சுற்றாடல் என்றால் என்ன?

இயற்கையாகக் காணப்படும் எல்லா உயிர் மற்றும் உயிரற்ற பொருட்களின் தொகுப்பாகும்.

02 இயற்கைச் சுற்றாடல் கூறுகள் எவை?

நீர், மண், தாவரம், நிலம், வாயு

03 சுற்றாடல் தொடர்பாக மனிதனின் கடமைகள் எவை?

1 நீரைப் பாதுகாத்தல்

2 காடுகள் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாத்தல்

3 கழிவுகளை உரிய முறையில் வெளியேற்றுதல்

4 சுற்றாடல் தொடர்பான சட்டங்களுக்கு ஏற்ப செயற்படுதல்

04 இலங்கையில் செயற்படும் சுற்றாடல் தொடர்பான பிரதான சட்டம் எது?

1980இல் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய சுற்றாடற் சட்டம்

05 இச்சட்டத்தினை செயற்படுத்தும் அமைப்பு எது?

மத்திய சுற்றாடல் அதிகார சபை

06 இலங்கையில் சுற்றாடல் தொடர்பாகச் செயற்படும் நிறுவனங்கள் எவை?

1 சுற்றாடல் அமைச்சு

2 வனப் பாதுகாப்புத் திணைக்களம்

3 புவியியல் மற்றும் பாதுகாப்புச்சபை

4 சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை

செயற்பாடு :- பின்வரும் அட்டவணைய் பூர்த்தி செய்க.

சூழல் அம்சங்கள்	**மாசடையச் செய்யும் மனித நடத்தைகள்**	**மாசடைதலின் விளைவுகள்**	**மாசடைதலைத் தடுக்கம் வழிமுறைகள்**
		நா.செல்வச்சந்திரன்	

பாடவேளை (30 – 13)

குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான மனிதர்களின் கடமைகள்

பின்வரும் உரிமைகளை அனுபவிக்கும் போது உங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் எவை?

உரிமைகள்	**கடமைகள்**
மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம்	
கல்வியைப் பெற்றுக்கொள்ளும் சுதந்திரம்	
கருத்துவெளியிடும் சுதந்திரம	
ஒன்றுகூடும் சுதந்திரம்	
தகவல் சேகரிக்கும் சுதந்திரம்	
வாக்களிக்கும் சுதந்திரம்	

பாடவேளை (30 – 14)

பொருளாதார, கலாசார உரிமைகள் தொடர்பான மனிதர்களின் கடமைகள்

பின்வரும் உரிமைகளை அனுபவிக்கும் போது உங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் எவை?

உரிமைகள்	கடமைகள்
8 மணித்தியால சேவைக்காலம்	
பொருத்தமான ஊதியம் பெறும் உரிமை	
விடுமுறை பெறும் உரிமை	
தொழிற்சங்கத்தில் பங்குகொள்ளும் உரிமை	

பாடவேளை (30 – 15)

இலங்கையில் மனித உரிமைகளைக் காப்பதற்காக உள்ள யாப்பு சார்ந்த ஒழுங்குகளின் வளர்ச்சி

நிதிசல்வச்சந்திரன்

01 இலங்கையில் எந்த யாப்பில் முதன் முதலில் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டது?

முதலாம் குடியரசு அரசியல் யாப்பில் (1972) 18வது உறுப்பரை

02 இரண்டாம் குடியரசு யாப்பில் அடிபபைட உரிமைகள் எத்தனையாம் அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டுள்ளது?

3வது அத்தியாயத்தில் 10 – 14 உறுப்புரை

03 அடிப்படை உரிமைகளையும் அவை இடம்பெறும் உறுப்புக்களையும் குறிப்பிடுக?

உறுப்புரை 10 - ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை பின்பற்றும் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம்

உறுப்புரை 11 - ஒவ்வொருவரும் சித்திரவதை அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற தண்டனைக்கு உட்படலாகாது

உறுப்புரை 12 - சட்டத்தின் முன் யாவரும் சமம். எந்தவொரு நபரும் இனம், மொழி, மதம், சாதி, பால் ரீதியாக வேறுபடுத்தப்படக்கூடாது.

உறுப்புரை 13 - ஒவ்வொருவரும் தனது நாட்டில் தனக்கு உதிராகப் புரியப்பட்ட சித்திரவதை தொடர்பாக முறைப்பாடு செய்ய உரிமை வழங்கப்படல்

உறுப்புரை 14 - பேச்சுச் சுதந்திரம், தொழிங்சங்கத்தை அமைக்கும் சுதந்திரம், மதவழிபாட்டில் ஈடுபடும் சுதந்திரம்

04 மனித உரிமை மீறப்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?

1 1978ம் ஆண்டி யாப்பின் 17 மற்றம் 126வது உறுப்புரையின்படி மனித உரிமைகள் மீறப்பட்டால் உயர் நீதிமன்றத்திற்கு மனுத்தாக்கல் செய்யலாம்.

2 அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

3 நிர்வாகச் செயற்பாட்டின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யலாம்.

4 தேசிய ரீதியில் வழங்கப்படும் தீர்ப்புக்கள் திருப்தி அடையாத போது சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

நிலைவஞ்சந்தினி

பாடவேளை (30 – 16)

உரிமைகள் தொடர்பான இன்றை நிலை

01 இலங்கையில் மனித உரிமைகளை அனுபவிப்பது தொடர்பான இன்றைய நிலை?

1 அரச அலுவல்கள், அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் அதிகாரிகள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அதனை விசாரிக்கும் அதிகாரம் ஒம்புட்ஸ்மனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2 அடிப்படை உரிமைகள் மீறுவது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டள்ளது.

3 தேசிய கல்வி நிறுவகம் பாடசாலை, தேசிய கல்வியியற் கல்லூரி பாடத்திட்டங்களில் மனித உரிமைகள் பற்றி மாணவருக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

நா.செல்வச்சந்திரன்

4 பல்கலைக்கழகங்கள், ஏனைய கல்வி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கூடாகவும் விழிப்பூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளன.

பாடவேளை (30 – 17)

சுற்றாடல் தொடர்பான மனிதர்களின் கடமைகள்

01 மனிதன் தான் சுதந்திரத்துடன் தன் பாதையில் பயணஞ் செய்ய முடியும். ஆனால் அச்சுதந்திரம் அடுத்தவரின் மூக்கு நுனி வரை மட்டுமேயாகும் எனக் கூறியவர்? ஹரல்ட் ஜே.லஸ்கி

02 இன மற்றும் சமய ஒற்றுமையைப் மேம்படுத்தல், தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாத்தல், பொது மக்களது சுகாதாரம் என்பன தொடர்பான எல்லைகளை வகுக்கும் அமைப்பு எது? அரசியல் யாப்பு

03 யுத்தம் நடைபெறுகின்ற போது பொது நலனை அடிப்படையாகக் கொண்டு ஊடக தணிக்கையினை மேற்கொள்ளும் அதிகாரம் அரசிற்கு உண்டா?

ஆம்

பாடவேளை (30 – 18)

பிரசைகளின் கடமைகள்

01 கடமைகளின் வகைகள் எவை?

1 சட்ட ரீதியான கடமை

2 பண்பாட்டு ரீதியான கடமை

02 சட்ட ரீதியான கடமைகள் என்றால் என்ன?

நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டத்திற்கு அமைவாக பிரசைகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்.

1 அரசாங்கத்திற்க வரி செலுத்துதல் 2 சட்டத்தை மதித்தல்

3 அரசியல் யாப்பைப் பாதுகாத்தல்

4 பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

நா. தெய்வச்சந்திரன்

03 பண்பாட்டு ரீதியான கடமைகள் எவை?

1 மதகுருமாரை மதித்தல்

2 மூத்தோரைப் பேணுதல்

3 ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்

4 விழுமியங்களை மதித்தலும் பின்பற்றுதலும்

5 சுற்றாடலைப் பேணுதல்

பாடவேளை (30 – 19)

உரிமைகள் தொடர்பான மனிதர்களின் கடமைகள்

01 பிரகைளின் அடிப்படைப் பொறுப்புக்கள் தொடர்பாக இரண்டாம் குடியரசு யாப்பின் எத்தனையாவது பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது?

28வது பிரமாணக் குறிப்பு

02 நாம் பிறந்ததும் இங்கம் பெறும் இடம் எது?

குடும்பம்

03 குடும்பம் மூலம் பெற்றுக்கொள்ளும் உரிமைகள் எவை?

உணவு, போசாக்கு. அன்பு, அரவணைப்பு, காப்பு, உறையுள், கல்வி

04 குடும்பமொன்றிற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் எவை?

1 பெற்றோரது சொற்கேட்டு நடத்தல்

2 மூத்தோரை கனம் பண்ணுதல்

3 வீட்டு வேலைகளில் உதவுதல்

நா.வேல்வச்சந்திரன்

05 பாடசாலை மூலம் நீங்கள் பெறும் சேவைகள் எவை?

1 கல்வியைப் பெற்றுக்கொள்ளுதல்

2 உங்கள் திறமைகளை விருத்தி செய்தல்

3 நற்பிரசைகளாக சமுகத்திற்கு உங்களை அறிமுகப்படுத்துதல்

06 பாடசாலைக்கு செய்ய வேண்டிய கடமைகள் எவை?

1 கற்றல் செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ளல்

2 ஆசிரியர்களுக்குக் கீழ்படிதல்

3 ஒழுக்கம் பேணல்

4 பாடசாலைச் சட்டதிட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்களை பாதுகாத்தல்

5 பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல்

பாடவேளை (30 – 20)

01 உயர் கல்வி நிலையத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் எவை?

02 தொழில் புரியும் நிலையத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் எவை?

செயற்பாடு :- பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

உரிமைகள்	**அவ்வுரிமைகள் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள்**
கல்வி பெறும் உரிமை	
தொழில் புரியும் மற்றும் நியாயமான அளவு ஊதியம் பெறும் உரிமை	
அமைதியாக ஒன்று கூடும் உரிமை	
சுயாதீனமாகக் கருத்து வெளியிடும் உரிமை	

நா.செல்வச்சந்திரன்

அலகு 04

சுற்றாடற் பிரச்சினைகளும் பேண்தகு அபிவிருத்தியும்

பாடவேளை (30 – 21)

சுற்றாடல் வரைவிலக்கணம்

01 உயிர்கள் வாழக்கூடிய கோள் எது?

புவி

02 புவியின் கூறுகள் எவை?

வளிக்கோளம், நீர்க்கோளம், கற்கோளம், உயிர்க்கோளம்

03 சூழல் என்பதற்குக் கூறப்படும் வரைவிலக்கணங்கள் எவை?

1 சியாட்டல் பிரகடனம்

- நாம் புவியின் ஓர் அங்கமாவதுடன் அது எம்மில் ஒரு பகுதியாகும்.
- மணம் வீசும் மலர்கள் எமது சகோதரர்கள் ஆவர்
- மான்கள், குதிரைகள், கழுகுகள் எமது சகோதர்கள் ஆவர்.
- குதிரையினதும் மனிதனதும் உடலில் வெப்பம் ஆகிய அனைத்தும் உரிமையாவது ஒரே குடும்பத்தின் அங்கத்தினருக்கேயாகும்.

2 மைக்கல் அல்ப் - உயிரி ஒன்றினைச் சூழவுள்ள பௌதீக, இராசயன மற்றும் உயிரியல் நிலைமைகள் சூழலாகும்.

3 கெரன் ஜோன்ஸ் - சூழல் என்பது உயிர்களின் இருப்பில் பாதிப்புச் செலுத்தும் வெளிவாரி நிலைமைகளின் தொகுப்பாகும்.

4 சூழல் அகராதி - சூழல் என்பது உயிர் ஒன்றினைச் சூழவுள்ள பௌதீக, இராசயன, உயிரியல் நிலையாகும்.

5 மனிதனும் சூழலும் - ஒருவரது சூழல் என்பது அவரது சுற்றுப்புறமாகும். அதே போல் தாவரங்கள் மற்றும் விலங்குகளது சூழலும் சுற்றுப்புறத்தினால் ஆனதாகும்.

செயற்பாடு :- சூழல் என்பதற்கு கூறக்குடிய பொதுவான வரைவிலக்கணம் ஒன்றை அமைக்குக

பாடவேளை (30 – 22)

மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான இடைத்தொடர்புகள்

01 சுற்றாடலை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

1 **பௌதிகச் சூழல்** - இயற்கையாக உருவாகியுள்ள சூழல் பௌதீகச் சூழலாகும். வளிக்கோளம், நீர்க்கோளம், கற்கோளம் ஆகிய உயிரற்ற கூறுகளாக அமையும். காலநிலை, பாறைகள், தரைத்தோற்ற அம்சங்கள், சமுத்திரங்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் தாவரங்களுடனும், உயிர்களடனும் பல்வேறு வழிகளில் தொடர்புபடுகின்றன.

2 **உயிரியல் சூழல்** - மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் தாவரங்களும், நீர்வாழ் உயிரினங்களும் கொண்ட மிகவும் மென்மையான பாகமாக உள்ளது.

நா. செல்வச்சந்திரன்

3 **சமூகச் சூழல்** - சமூகச்சூழலான பௌதிகக் கட்டமைப்பில் பல்லினத்தன்மை, சமயங்கள், சாதிகள், மரபுரிமைகள், சம்பிரதாயங்கள், உரிமைகள், கடமைகள் போன்றன உள்ளன. இவை மனிதனது தலையீட்டினால் கட்டியெழுப்பப்பட்டவையாகும்.

02 மனிதனுக்கும் சூழலுக்கும் இடையில் இடைத்தொடர்பு காணப்படுகின்றது என்பதற்கான ஆதாரங்கள் எவை?

1 இயற்கைச் சூழலானது மனிதனின் இருப்புக்கு இன்றியமையாதது (உதாரணம் வளி, நீர், தாவரங்கள்)

2 உணவு உற்பத்தி செய்துகொள்வதற்கு பௌதிகச் சூழல் இன்றியமையாதது

3 சூழல் இன்றி மனிதன் இருக்க முடியாது

4 மனிதன் சூழலின் ஒரு கூறு ஆவான்.

03 இயற்கைச் சூழல் என்றால் என்ன உதாரணம் தருக?

புவியில் காணப்படகின்ற உயிருள்ள, உயிரற்ற அனைத்தும் இயற்கைச் சூழலாகும். இவை மனிதனது செல்வாக்கின்றி இயற்கைத் தொகுதிகளாக இயங்குகின்றன.

உதாரணம் - தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மண், நீர், நீர், வளி

04 இயற்கைச் சூழலுக்குரிய நிகழ்வுகள் எவை?

1 காபன் வட்டம் 2 நீரியல் வட்டம்

3 கனிய வட்டம் 4 உணவு வலை

05 மனிதன் சூழலினால் பெற்றுக் கொள்ளும் நன்மைகளைக் குறிப்பிட்டு விளக்குக?

1 **பொருளாதார உதவிச் சேவைகள்** - மனித வாழ்க்கைக்குத் தேவையான மூலப்பொருட்களும், சக்தியும் இதனுள் அடங்கும். மூலப் பொருட்களான நிலம், கனிய வளங்கள், இராசாயனப் பதார்த்தப்பொருட்கள், தாவரங்கள், வலங்குகள் என்பனவும் சக்திகளாக சூரியசக்தி, உயிர்ச்சுவட்டு எரிபொருள், உயிரியல் வாயு, புவிவெப்பம் என்பனவும் அடங்குகின்றன. மனிதன் இவற்றின் மீதே அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றான்.

நா.செல்வச்சந்திரன்

2 **வாழ்க்கைக்கு உதவும் சேவைகள்** - இயற்கையாகக் கிடைக்கும் சூரிய ஒளி, காற்று, நீர் போன்றன இதனுள் அடங்கும். இவை உயிரின் இருப்புக்கு அவசியமானவையாகும்.

3 **கழிவு உறிஞ்சல் சேவை** – விலங்குகளது வாழ்க்கையில் பல்வேறு செயற்பாடுகள், மனிதனது பொருளாதார நடவடிக்கைகள் மூலம் சூழலில் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்கள் சூழல் மூலம் அகத்துறிஞ்சப்படுகின்றது. எனினும் சூழலினால் தாங்க முடியாத அளவுக்கு சேரும் கழிவுப் பொருட்களினால் அகத்துறிஞ்சம் சக்தி குறைவடைகின்றது.

06 மனிதன் புவியில் உள்ள உயிர்களில் எத்தனை சதவீதமாக உள்ளான்?

0.5வீதம்

07 மனிதன் பௌதீகச் சூழலை எவ்வாறு வரையின்றி பயன்படுத்துகின்றான்?

1 குடியேற்றங்களை அமைத்தல்
2 விவசாய மயமாக்கம்
3 கைத்தொழில் மயமாக்கம்
4 நகர மயமாக்கம்
5 உட்கட்டமைப்பு வசதிகன்

பாடவேளை (30 – 23)

தற்கால சூழல் பிரச்சினைகளை இனங்காணல்

01 சுற்றாடல் பிரச்சினை என்றால் என்ன?

தாவர, விலங்குச் சாகியங்களின் இருப்புக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் சுற்றாடல் நிபந்தனைகள் மாற்றமடைதலே சுற்றாடல் பிரச்சினை எனப்படும்.

02 சுற்றாடல் பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?

நாகேஸ்வரன்

1 வளங்கள் வரையறையற்ற விதத்தில் அபரிமிதமாக நுகரப்படுதல்
2 காடழிப்பு
3 முறையற்ற வளப்பாவனை
4 பாதுகாப்பற்ற பயன்பாடு

03 சுற்றாடல் பிரச்சினைகளால் ஏற்படும் சமூகப் பாதிப்புக்கள் எவை?

1 உணவு மற்றும் போசாக்குப் பிரச்சினைகள்
2 நோய்கள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்
3 விபத்துக்காளல் ஏற்படும் உயிர் மற்றும் சொத்திழப்புக்கள்
4 சமூக, பொருளாதார சீரழிவுகள்

04 இயற்கைக் காரணிகளால் பௌதீகச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

1 புவியதிர்வு 2 நிலச்சரிவு 3 எரிமலை வெடிப்பு

4 காட்டுத் தீ 5 பனிமலைச் சரிவு6 வெள்ளப் பெருக்கு

7 வறட்சி 8 சூறாவளி 9 சுனாமி

05 இயற்கைக் காரணிகளால் ஏற்படும் அழிவுகள் எவ்வாறு அழைக்கப்படும்?

குறுங்கால அழிவுகள்

06 மனிதச் செயற்பாடுகளினால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகள் எவை?

1 புவிவெப்பமடைதல் 2 வானிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படல்

3 உயிர்ப்பல்வகைமையின் பாதிப்பு 4 வளி மற்றும் நீர் அசுத்தமடைதல்

5 மண் வளமற்றுப்போதல் 6 அமில மழை ஏற்படல

7 ஓசோன் படை பாதிக்கப்படல் 8 பாலைவனமாதல் ஏற்படல்

9 பனிக்கட்டிகள் உருகுதல் 10 சமுத்திர நீர் மட்டம் உயர்வடைதல்

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (30 – 24)

01 சுத்தமான நீர் என்றால் என்ன?

அமிலத்தன்மை அல்லது காரத்தன்மை ஆகிய இரண்டுமற்ற தூய்மையான நீராகும்.

02 சுத்தமான நீரின் pH பெறுமானம் எவ்வளவு?

7.0 வீதம்

03 உலகில் காணப்படும் எத்தனை சதவீதமான மக்கள் சுத்தமான நீரைப் பெற முயடிாதுள்ளனர்?

24வீதம்

04 நீர் மாசடைதல் என்றால் என்ன?

நீரில் இயற்கையாகக் காணப்படும் இயல்புகள் மாற்றமடைதலாகும்

05 நீர் மாசடையும் வழிகள் எவை?

1 கைத்தொழில் நடவடிக்கைகள் மூலம் - கடதாசி, வர்ணப்பூச்சுக்கள், துணிவகைகள், தோல் பதனிடல், கனிய எண்ணெய், இறப்பர் போன்ற உற்பத்திகளின் போது ஏற்படும் கழிவுகள் நீருடன் கலத்தல்

2 விவசாய நடவடிக்கைகள் மூலம் - பசளைகள், களைகொல்லிகள், பூச்சிக்கொல்லிகள், கிருமிநாசினிகள் போன்ற நீருடன் கலத்தல்

3 வீட்டுக் கழிவுகள் மூலம் - குப்பைகள் மற்றும் மனிதக் கழிவுகள் நீருடன் கலத்தல்

4 இயற்கைக் காரணிகள் மூலம் - எரிமலை வெடிப்பு, புவியதிர்வு, சுனாமி, நிலச்சரிவு

5 இரத்தினக்கல் அகழ்வு, சுரங்கமகழ்வு, வீடமைப்பு, நிலக்கீழ் நீர் மற்றும் குழாய்க்கிணறு அமைத்தல், செயற்கையான நீர்த்தேக்கங்களை அமைத்தல்

நா.குலேஸ்வச்சாதிரன்

06 நீர் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினைகள் எவை?

1 நீரியல் வட்டத்தின் செயற்பாடுகள் தடைப்படுதல்

2 நீர்வாழ் அங்கிகள் அழிவடைதல்

3 அசுத்தமடைந்த நீரினைப் பரவுவதால் நோய்கள் ஏற்படுதல்

4 விவசாய நடவடிக்கை பாதிக்கப்படல்

5 சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ள அதிக செலவு ஏற்படுதல்

07 கற்கோளம் என்றால் என்ன?

புவியின் வெளிப்புறத்தில் காணப்படும் வன்பாறைப்படலமாகும்

08 கற்கோளத்தில் காணப்படும் கனியவளங்கள் எவை?

இரும்பத்தாது, அலுமினியம், மக்னீசியம், ஈயம், வெள்ளி, பிளாட்டினம், யுரேனியம், காரீயம்

09 கற்கோளம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் எவை?

1 சுற்றாடலின் இயற்கை அழகு அழிவுறல்

2 மண்வளம் குன்றுதல்

3 தரிசு நிலம் உருவாதல்

4 வெள்ளப் பெருக்கு ஏற்படல்

5 காடுகளின் மூடுபடை அழிவுற்றுப்போதல்

10 நிலப் பயன்பாடு என்றால் என்ன?

இயற்கையாக அமைந்துள்ள நிலப்பரப்பில் மனிதத் தேவைகளுக்காக மாற்றங்களை ஏற்படுத்துதலே நிலப் பயன்பாடு என்பதாகும்.

11 மனிதன் நிலத்தை எத் தேவைகளுக்காக பயன்படுத்துகின்றான்?

1 குடியிருப்புக்களை அமைப்பதற்கு 2 விவசாய நடவடிக்கைகளுக்கு

3 கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு

4 வீதி வலைப்பின்னல்களை அமைப்பதற்கு

5 செயற்கைச் சூழலை உருவாக்க

5 பொழுபோக்கு இடங்களை அமைப்பதற்கு

நா.முல்வச்சந்திரன்

பாடவேளை (30 – 05)

01 உலகின் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு?

144.8 மில்லியன் சதுர கிலோ மீற்றர்

02 மொத்த நிலப்பரப்பில் பயரிர்ச்செய்கைக்கு உகந்த நிலம் எவ்வளவு?

11வீதம்

03 காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 விவசாயத்திற்காக நிலத்தை தயார்படுத்தல்

2 சக்தி வலுவின் தேவையைப் பூர்த்தி செய்தல்

3 மரப்பலகை வியாபாரம்

4 குடியேற்றங்களை தாபித்தல்

5 கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல்

6 கனியங்களை அகழ்தல்

7 பாதைகளை அமைத்தல்

04 மிகப்பாரியளவில் காடழிப்பை மேற்கொள்ளும் நாடுகள் எவை?

ஐவரிகோஸ்ட் - 85வீதம் கொங்கோ – 68வீதம்

பங்களாதேஸ் - 95வீதம் இலங்கை - 78வீதம்

05 காடழிப்பினால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

நா.தேல்வச்சந்திரன்

1 வளிக்கோளத்தில் ஒட்சிசன் வழங்கலுக்கு தடை ஏற்படுவதுடன் காபனீரொட்சைட்டினை உறிஞ்சும் ஆற்றல் குறைவடைதல்

2 நீர் மட்டம் குறைவடைதல் 3 மண்ணின் ஈரப்பதன் குறைவடைதல்

4 வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவும் ஏற்படுதல்

5 நீர் வட்டத்தின் செயற்பாட்டிற்கு தடங்கல் ஏற்படுதல்

6 உயிர்களுக்கு வாழிடம் அற்றுப்போதல்

7 சுற்றாடலின் அழகு குறைவடைதல்

06 விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படும் இரசாயனப் பொருட்கள் எவை?

பசளைகள், களைகொல்லிகள், பூச்சிக்கொல்லிகள், கிருமிநாசினிகள

07 நிலத்தில் சேரும் உக்காத கழிவுப்பொருட்கள் எவை?

பிளாஸ்டிக் பொருட்கள், செயற்கைப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள்

08 கைத்தொழில் மூலம் வெளிவரும் கழிவுப் பொருட்கள் எவை?

கனிய எண்ணெய், கனியங்களின் பகுதிகள், உலோகப் பொருட்கள், அல்லுலோகப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள்

09 கழிவுப்பொருட்களுள் அபாயகரமானதாக விளங்கும் கழிவுப்பொருள் எது?

1 அணு சக்திக் கழிவுகள்

10 கழிவுகளைக் கையாள்வதற்கான வழிமுறைகள் எவை?

1 மீளப்பயன்படுத்தல்

2 மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்

3 உபயோகத்தைக் குறைத்தல்

4 பல்வேறு தேவைகளுக்கும், ஆக்கங்கள் செய்வதற்கும் பயன்படுத்தல்

11 வளி மாசடைதல் என்றால் என்ன?

வளிக்கோளத்தின் அமைவுச் சேர்க்கையில் ஏற்படும் மாற்றம் வாயு மாசடைதல் எனப்படும்.

நா.செல்வச்சந்திரன்

12 வளி மாசடைதலுக்கான காரணங்கள் எவை?

1 இயற்கையான முறை 1 எரிமலை வெடிப்பு 2 காட்டுத்தீ 3 புழுதிப்புயல்

2 மனித செயற்பாடுகள்

1 கைத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை

2 வாகனப் புகை 3 குப்பை கூளங்களை எரித்தல்

4 காடுகளை அழித்தல் 5 குளிரூட்டிகளின் பயன்பாடு

13 பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றும் துறைகள் எவை?

1 வலுக்கசக்தி பிறப்பாக்கம் - 26வீதம்

2 கைத்தொழில்கள் - 19வீதம்

3 விவசாயம் - 19வீதம்

4 காடழிப்பு - 17வீதம்

5 போக்குவரத்து - 13வீதம்

14 வளிக்கோளத்தில் அதிகம் உள்ள வாயுக்கள் எவை?

நைதரசன், ஒட்சிசன், ஆகன்

15 ஓசோன்படையை சிதைவடையச் செய்வதன் மூலம் வளி மாசடைதலுக்கு காரணமான வாயுக்கள் எவை?

காபனீரொக்சைட், காபனொக்சைட், நைதரசனொட்சைட், குளோரோபுளோரோகாபன், மெதேன்

16 வளி மாசடைவதால் ஏற்படும் தீமைகள் எவை?

புவிவெப்பமடைதல், ஓசோன்படை பாதிக்கப்படல், அமிலமழை பொழிதல், காலநிலை மாற்றம் ஏற்படல், பனிமலைகள் உருகுதல், கடல் நீர் மட்டம் உயர்வடைதல்

பாடவேளை (30 – 26)

சூழல் மாசடைவதால் ஏற்படும் விளைவுகள்

நா.இரவிச்சந்திரன்

01 வளியில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதற்கான காரணங்கள் எவை? (26வீதம்)

1 கைத்தொழிற் புரட்சி

2 எரிபொருள் தகனம்

3 காடழிப்பு

02 மெதேன் வாயு அதிகரிப்பதற்கான காரணங்கள் எவை?

1 விவசாய நடவடிக்கைகள்

2 விலங்கு வேளாண்மை நடவடிக்கைகள்

3 உயிரியல் கழிவுகளின் தகனம்

03 காலநிலை மாற்றம் ஏற்படக் காரணங்கள் எவை?

1 கைத்தொழிற் புரட்சி 2 எரிபொருள் தகனம்

3 காடழிப்பு 4 விவசாய நடவடிக்கை

5 விலங்கு வேளாண்மை 6 வாகனப் புகை

04 காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தீமைகள் எவை?

1 சூழல் வெப்பநிலை உயர்வடைதல்

2 பனிமழை மற்றும் பனிப்படலம் உருகுதல்

3 சமுத்திரத்தின் நீர் மட்டம் உயர்வடைதல்

4 படிவு வீழ்ச்சி செய்முறை மாற்றமடைதல்

5 மின்ல், சூறாவளி, பனிமழை போன்ற நிகழ்வு ஏற்படல்

6 பருவமழைச் செயன்முறையில் பாதிப்பு ஏற்படுதல்

7 விவசாய விளைச்சல் குறைவடைதல்

நா. ஸ்ரீவச்சந்திரன்

04 சூழல் மாசடைவதால் உயிர்ச்சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

1 உயிர்ச் சூழலின் சமநிலை சீர்குலைதல்

2 தனித்துவமான தாவரங்களும் விலங்கினங்களும் அழிதல்

3 உயிர்த்தொகுதிகளின் செயற்பாடுகள் சீர்குலைதல் (ஒட்சிசன் வட்டம், நீரியல் வட்டம்)

4 உணவுத் தயாரிப்பும், உயவுச் சங்கிலியும் பாதிப்புறல்

5 ஆக்கிரமபிபுத்தன்மையுள்ள தாவரங்களும் விலங்குகளும் உருவாதல்

05 சூழல் மாசடைவதால் சமூகச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் எவை?

1 சமுகத் தொடர்புகள் சீர் குலைதல்

2 சமய மற்றும் இன மோதல்கள் ஏற்படுதல்

3 சமூக அநீதிகள் ஏற்படுதல் 4 குடும்ப அமைப்பு சீர்குலைதல்

5 சமூக ஒழுக்கக்கேடுகள் அதிகரித்தல்

6 சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்தல்

06 சூழல் தொடர்பான அரசின் பொறுப்புக்களும், கடமைகளும் எவை?

1 தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைவாக பாரிய அளவு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் முன்னர் சூழல் பாதிப்புக்களை மதிப்பிடல், சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல், மற்றம் சூழல் தர நிர்ணயங்களை அறிமுகப்படுத்துதல்

2 காலத்திற்குக் காலம் சுற்றாடலின் தேவைகளைக் கருத்திற் கொண்டு தேசிய மற்றும் பிராந்திய ரீதியில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் மூலம் சூழலைப் பாதுகாத்தல்

3 சூழல் தொடர்பான சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுவதற்கு ஏற்ற வகையில் பிரசைகளின் மனப்பாங்கை விருத்தி செய்தல்

4 நாட்டின் உற்பத்தி மற்றம் கைத்தொழில் துறைகளில் பசுமை வினைத்திறன் எண்ணக்கருவைப் புகுத்துதல்

5 விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் சூழல் நேயப் பிரசைகளை உருவாக்குதல்

நா.குலேஸ்வச்சந்திரன்

07 சூழல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புக்களும், கடமைகளும் எவை?

1 சுற்றாடல் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்

2 உக்காத கழிவுப் பொருட்களைச் சூழலில் விடுவிப்பதைத் தவிர்த்தல்

3 கழிவுப்பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல்

4 வீடு மற்றும் அயற் சூழலைப் பாதுகாத்தல்

5 சூழலின் இருப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயற்படல்

6 சுற்றாடல் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுதல்

7 சூழல் தொடர்பாகச் செயற்படும் நிறுவனங்களுக்கு முழுமையான அனுசரணையை வழங்குதல்

பாடவேளை (30 – 27)

அபிவிருத்தி

01 அபிவிருத்தி என்பதற்கு கூறப்படும் வரைவிலக்கணங்கள் எவை?

1 டட்சி சியர்ஸ் - ஒரு நாட்டின் வறுமை நிலை ஒழிந்து வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து வருமானப் பகிரிவிலுள்ள முரண்பாடு நீக்கப்படுமாயின் அதுவே அபிவிருத்தியாகும்.

2 கிங்டல் பார்க் - உற்பத்திகளின் அதிகரிப்பும் அதற்குக் காரணமாய் அமைந்த நுட்ப முறைகளினதும் நிறுவன அமைப்புகிளினதும் வளர்ச்சியே அபிவிருத்தியாகும்.

3 ஐக்கிய நாடுகள் சபை

அபிவிருத்தி என்பது சனத்தொகை, சமூகம், கலாசாரம், ஒழுக்கம் எனும் பண்புகளை உள்ளடக்கிய மாற்றம் மற்றும் வளர்ச்சி தொடர்பான செயற்பாடாகும். அபிவிருத்தி என்பது உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.

நா.செல்வச்சந்திரன்

02 அபிவிருத்தி என்ற எண்ணக்கருவில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

ஆரம்பத்தில் பொருளாதார வளர்ச்சியை மட்டும் கவனத்திற் கொண்டதாக காணப்பட்டது.

பின்னர் வாழ்க்கைத்தரத்தின் வளர்ச்சியையும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

இது மேலும் விரிவடைந்து மக்களின் மரபுகள், கலாசாரம் மற்றும் விழுமியங்களில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதுடன் மனித உரிமைகள், ஜனநாயகம், அரசியல் நிறுவனங்களின் இயல்பு, சூழலின் பண்புசார் நிலைமை என்பவற்றையும் உள்வாங்கிக் கொண்டது.

பாடவேளை (30 – 028)

அபிவிருத்தியை அளவிடுவதன் முக்கியத்துவம்

01 அபிவிருத்தியை அளவிடுவதன் முக்கியத்துவங்கள் எவை?

1 ஒரு நாட்டில் வெவ்வேறு காலப்பகதிகளில் காணப்படும் அபிவிருத்தி வேறுபாடுகளை இனங்காணல்

2 நாடொன்றில் காணப்படும் பொருளாதார, சமூக மற்றும் நல்லொழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணல்

3 இனங்கண்ட பிரச்சினைகளை இழிவாக்குவதற்கான வழிவகைகளை இனங்காணலும் நடைமுறைப்படுத்தலும்.

4 நாட்டின் பொருளாதார , பண்பாட்டு, நல்லொழுக்க விருத்திக்காகக் கொள்கை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

5 அபிவிருத்தி மட்டத்தை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுதல்

6 எதிர்வரும் ஆண்டுகளுக்கான பொருளாதாரத்தில் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்தல்

7 அபிவிருத்தி முரண்பாடுகள் அடையாளம் காணப்படும்

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (30 – 29)

அபிவிருத்தியை அளவிடும் முறைகள்

01 அபிவிருத்தியை அளப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அளவீடுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

1 மரபு ரீதியான அளவீடுகள் அல்லது பாரம்பரிய அளவீட்டு முறைகள்

2 நவீன அளவீடுகள்

02 மரபு ரீதியான அளவீட்டு முறைகள் எவை?

1 மொத்த தேசிய உற்பத்தி

2 தனிநபருக்கான தலா தேசிய உற்பத்தி

3 பொருளாதார வளர்ச்சி வேகம்

03 மொத்த தேசிய உற்பத்தி என்றால் என்ன? அது எவ்வாறு கணிப்பிடப்படுகிறது?

ஒரு நாட்டினது அந்நிய செலாவணி வருவாயை கருத்திற்கொண்டு கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளினதும் ஒட்டு மொத்தப் பெறுமதியாகும்.

மொத்த தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + மொத்த வெளிநாட்டு வருவாய்

04 தனிநபருக்கான தலா தேசிய உற்பத்தி என்றால் என்ன? அது எவ்வாறு கணிப்பிடப்படுகிறது?

நா.செல்வச்சந்திரன்

ஒரு நாட்டில் வருடமொன்றிற்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவில் அந்த நாட்டின் பிரசை ஒருவருக்கு உரித்தாகும் அளவு தலா தேசிய உற்பத்தியாகும்.

$$\text{தலா தேசிய உற்பத்தி} = \frac{\text{மொத்த தேசிய உற்பத்தி}}{\text{நட்டாண்டு சனத்தொகை}}$$

05 தனிநபர் தலா தேசிய உற்பத்தியின் குறைபாடுகள் எவை?

1 பொருளாதாரத் தகவல்களை மட்டும் கருத்திற் கொள்ளுதல்

2 சமூக நிலையை வெளிப்படுத்தாது இருத்தல்

3 சமூக நலன்புரிக் காரணி தொடர்பில் தகவல்களை முன்வைக்காமை

4 உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யாதவர்களுக்கும் இதன் பெறுமானம் பகிர்ந்தளிக்கப்படுதல்

பாடவேளை (30 – 30)

01 நவீன அபிவிருத்தியை அளவிடும் முறைகள் எவை?

1 பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் (PQLI)

2 மனித அபிவிருத்திச் சுட்டி (HDI)

3 மனித வறுமைச் சுட்டி

4 மனித அழுத்தச்சுட்டி

02 பௌதீக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண்ணைத் தயாரிப்பதற்குப் பயன்படும் குறிகாட்டிகள் எவை?

1 எழுத்தறிவு 2 பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு

3 சிசுமரணவீதம்

03 பௌதீக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண்ணின் பெறுமானம் எவற்றுக்கிடையில் அமைந்திருக்கும்?

நா.செல்வச்சந்திரன்

0 – 100

04 பௌதீக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண்ணைக் கணிப்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?

1 நாட்டின் சமூக, கலாசார துறைகள் பற்றிய விளக்கத்தைப் பெறலாம்.

2 நாட்டின் கல்வி, போசாக்கு மற்றம் சுகாதார நிலை பற்றி அறியலாம்

3 சமூக அபிவிருத்தியின் இயல்பை அறியலாம்.

4 தனிநபர் வருவாயின் குறைபாட்டை இதன் மூலம் நீக்க முடியும்.

05 மனித அபிவிருத்திச்சுட்டியில் உள்ளடங்கும் குறிகாட்டிகள் எவை?

1 ஆயுள் எதிர்பார்ப்பு 2 கல்விக்குறிகாட்டி 3 கொள்வனவுச் சக்தி

06 மனித அபிவிருத்திச்சுட்டியை அளவிடுவதன் முக்கியத்துவம் யாது?

1 மனிதனின் அபிவிருத்திமட்டம் அளக்கப்படும்.

2 நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை சமூக, பொரளாதார துறைகள் இரண்டின் மூலமும் அறியலாம்

3 இதன் மூலம் மிக உயர்ந்த, மத்தியதர, கீழ்மட்ட அபிவிருத்தி இயல்பை அறியலாம்.

07 மனித அபிவிருத்திச்சுட்டியின் அடிப்படையில் நாடுகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது?

1 மிக உயர்வான நாடுகள் 2 மத்தியதர நாடுகள் 3 கீழ்மட்ட நாடுகள்

பாடவேளை (30 – 01)

அபிவிருத்தி அடிப்படையில் நாடுகளின் வகைகள், அபிவிருத்திச் செயன்முறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள்

இ.செல்வானந்தராஜா

01 அபிவிருத்தியின் அடிப்படையில் நாடுகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன?

1 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்

2 அபிவிருத்தியடைந்த நாடுகள்

02 அபிவிருத்திச் செயன்முறையில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் எவை?

1 மூலதனப் பற்றாக்குறை

2 முதனிலைப் பொருட்களின் விலைத் தளம்பல்

3 இறக்குமதி செய்யும் பொருட்களுக்காக அதிக விலையைச் செலுத்துதல்

4 பாதகமான சென்மதி நிலுவை

5 சர்வதேச வியாபாரத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பின்பற்றும் பாதுகாப்பு வழிமுறைகள்

6 வலுக்சக்தி நெருக்கடி

7 மூளைசாலிகளின் வெளியேற்றம்

03 அபிவிருத்திச் செயன்முறையின் போது எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வு முறைகள் எவை?

1 உள்நாட்டுச் சேமிப்பை மேம்படுத்துதல்

2 ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துதல்

3 புதிய சந்தைகளைத் தேடுதல்

4 இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கைகளைப் பின்பற்றுதல்

5 மாற்று வலுச்சக்திகளை அறிமுகம் செய்தலும் பயன்படுத்தலும்

6 வலய அமைப்புக்களை உருவாக்குதல்

7 வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

பாடவேளை (30 – 12)

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்

01 அபிவிருத்திய அடைந்துவரும் நாடுகளுக்கு உதாரணங்கள் தருக?

இந்தியா, இலங்கை, பங்களாதேஸ், சோமலியா, எதியோப்பியா

02 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பண்புகள் எவை?

1 தனிநபர் வருமானம் 3500 அமெரிக்க டொலரிலும் குறைவாக இருக்கும்

2 வெளிநாட்டுச் செலாவணி உழைப்பு வீதம் குறைவாக இருக்கும்

3 பௌதிக வாழ்க்கைப் பண்புசடசுட்டென் தாழ் மட்டத்தில் காணப்படும்

4 மனித அபிவிருத்திச்சுட்டி தாழ் மட்டத்தில் காணப்படும்

5 மக்கள் தொகை வளர்ச்சி வேகம் உயர் மட்டத்தில் காணப்படும்.

6 சிசுமரணவீதம் உயர்வாகக் காணப்படும்.

03 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

1 மூலதனப்பற்றாக்குறை

2 பயங்கரவாதப் பிரச்சினைகள்


3 அரசியல் உறுதிப்பாடின்மை

4 அந்நிய செலாவணிப் பற்றாக்குறை

5 உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காமை

6 வேலையின்மை

04 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் நச்சு வட்டத்தை வரைக.



பாடவேளை (30 – 03)

அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கையின் சிறப்பியல்புகள்

01 அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கையின் சிறப்பியல்புகள் எவை?

1 எழுத்தறிவு வீதம் உயர்வான மட்டத்தைக் கொண்டுள்ளது

2 சிசுமரணவீதமும், பிரசவத்தாய் மரணவீதமும் குறைவாகக் காணப்படுகின்றது

3 ஆயுள் எதிர்பார்ப்பு உயர்வாகக் காணப்படுகின்றது

02 இலங்கையில் அபிவிருத்திக்கான சவாலை வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை?

1 சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல்

2 உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்

3 தொழிநுட்ப அறிவையும், திறன்களையும் விரிவுபடுத்தல்

4 அரசியல் உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்புதல்

5 உள்நாட்டுச் சேமிப்பை ஊக்குவித்தல்

6 ஏற்றுமதியை பன்முகப்படுத்துதல்

7 உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்

8 ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவித்தல்

9 கடல்சார், கல்விசார், தொழினுட்பம்சார் கேந்திர நிலையமாக இலங்கையை உருவாக்கல்

நாகேஸ்வரந்திரன்

பாடவேளை (30 – 04)

அபிவிருத்தி அடைந்த நாடுகள்

01 அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு உதாரணம் தருக?

நோர்வே, சுவீடன், ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜேர்மன்

02 அபிவிருத்தியடைந்த நாடுகளின் பண்புகள் எவை?

1 தலா வருமானம் 3500 அமெரிக்க டொலர்களுக்கு மேல்

2 பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டெண் 90 இற்கு மேல்

3 மக்கள் தொகை வளர்ச்சி வேகம் தாழ்வான மட்டத்தில் இருத்தல்

4 உயர் எழுத்தறிவு வீதம் காணப்படுதல்

5 சிசுமரண வீதம் குறைவாக இருத்தல்

6 மனித அபிவிருத்திச்சுட்டி 0.08 இற்கு மேற்பட்டதாகக் காணப்படும்.

நா.செல்வச்சந்திரன்

03 அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

1 சூழல் மாசடைதல்

2 சர்வதேசப் பயங்கரவாதம்

3 மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம்

4 வலுக்சக்தி நெருக்கடி

5 சமூகப் பிரச்சினைகள் உக்கிரமடைதல்

6 புதிய கைத்தொழில் நாடுகளுடனான சந்தைப் போட்டி

பாடவேளை (30 – 05)

பேண்தகு அபிவிருத்தி

வரைவிலக்கணமும் முக்கியத்துவமும்

01 நிலையான அபிவிருத்தி என்றால் என்ன?

நவீன மனிதனது அபிவிருத்தி முயற்சிகள் எதிர்கால மனிதனுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாத வண்ணம் புவிக்கோளத்தின் எதிர்கால இருப்பைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் முயற்சியே நிலையான அபிவிருத்தி எனப்படும். எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்களை இல்லாதொழிப்பதை தவிர்த்து நிகழ்கால அபிவிருத்தி செயன்முறைகளை முன்னெடுப்பதாகும். எதிர்காலச் சந்ததிக்கான தேவைகளைப் பூர்தி செய்யும் வகையிலானஅபிவிருத்தி செயற்பாடுகளையும் அதற்கான வழிவகைகளையும் உலகளாவிய மற்றும் தேசிய மட்டங்களில் முன்னெடுப்பதாகும்.

நா.செல்வச்சந்திரன்

02 பேண்தகு அபிவிருத்தியின் முக்கியத்துவங்கள் எவை?

1 தனிப்பட்ட நன்மைகளை எதிர்பார்த்துச் செயற்படுவதன் காரணமாக நலனோம்பற் கருமங்களின் முக்கியத்துவம் குறைவடைதல்.(உற்பத்திகள் வணிகமயமாதலின் விளைவாக இலாபத்தை எதிர்பார்த்துச் செய்யப்படுகின்றமையால் பாதகமான உற்பத்திப் பொருட்களும் சந்தையை வந்தடைதல். பொருளாதார எதிர்பார்ப்புக்களையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் போது சுற்றாடல் தொடர்பான கரிசனை அற்றுப்போதல்)

2 குறுகிய காலத்துள் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முனைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள்(காடுகள் அழிக்கப்படுதல், வளங்களின் மிகை நுகர்வு, குழாய் கிணறுகள் அமைத்தல்)

3 சூழல் நேயமான முறைகள், உத்திகளைப் பயன்படுத்தாமை (தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை, மாசடைந்த நீர் போன்றவற்றைச் சூழலில் விடுதல்)

4 சமூகக் கிரயம் அதிகரித்தல் (கழிவுப் பொருட்களை முறையற்ற வகையில் சூழலில் விடுவித்தல்

பாடவேளை (30 – 06)

பேண்தகு அபிவிருத்தி உருவானதன் பின்னணியும் அதன் சவால்களும்

01 நிலையான அபிவிருத்தியின் தோற்றத்திற்குக் காரணமானவர் யார்?

நோர்வே நாட்டின் முன்னாள் பிரதமர் திரு.கார்லம் புருண்ட்லண்ட்

நா.செல்வச்சந்திரன்

02 இவரது தலைமையில் அமைக்கப்பட்ட அமைப்பு எது? எத்தனையாம் ஆண்டு அமைக்கப்பட்டது?

1983ம் ஆண்டு உலகச் சூழல் ஆணைக்குழு

03 இவர்கள் வெளியிட்ட அறிக்கை எது? எமது பொதுவான எதிர்காலம்

04 அவ்வறிக்கையின் முக்கிய கருத்து யாது?

சூழலையும் அபிவிருத்தியையும் ஒன்றிணைத்தல்

05 சூழலும் அபிவிருத்தியும் பற்றிய சர்வதேச மாநாடு

நடைபெற்ற இடம் - ரியோடிஜெனிரோ

ஆண்டு - 1992

விடயம் - சூழல் பிரச்சினைகள்

06 சூழல் பிரச்சினை தொடர்பாக கூட்டப்பட்ட மாநாடுகள் எவை?

2000 – ஐக்கிய நாடுகளினால் புத்தாயிரம் ஆண்டுக்கான மாநாடு – நிலையான அபிவிருத்திக்கு மன்னுரிமை அளிக்கப்பட்டது.

2005 – புத்தாயிரம் ஆண்டு குறிக்கோள்களும் அதன் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான முன்னேற்ற அறிக்கை

2012 – றியோடிஜெனிரோ – நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததிக்கான பொருளாதாரம் மற்றும் சமூகச்சூழல் என்பவற்றை ஏற்படுத்துதல்

07 நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக வெற்றி கொள்ள வேண்டிய சவால்கள் எவை?

1 சூழல் அபிவிருத்தி - சூழல் நேய வளங்கள், அழகியல் சார் அம்சங்களைப் பாதுகாத்தல் புவியினால் தாங்கிக்கொள்ளக்கூடிய அபிவிருத்தி

நா.செல்வச்சந்திரன்

2 பொருளாதார அபிவிருத்தி - சமூகப் பாதிப்புக்களை தவிர்த்தல் சந்தை விரிவடைவதால் ஏற்படும் போட்டி அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உற்பத்தி மனப்பாய்கு

3 இயற்கைத் தேவைகள் - மனப்பாங்கு விருத்தி உற்பத்திக்குப் பயன்படும் தொழிநுட்பம் சமூகப் பங்குபற்றல் நியாயத்தன்மை நிலை நாட்டல்

08 இளவரசனின் தோற்றம் என்னும் படைப்பின் ஆசிரியர் யார், அவரின் கருத்து யாது?

காளிதாசர் - உலகில் உள்ள வனங்களைப் பயன்படத்தும் போது பசுவில் பால் கறப்பதைப் போன்று பக்குவமாக நடந்து கொள்ளல் வேண்டும். அதாவது பசுவின் தேக ஆரோக்கியத்திற்குப் பாதிப்பின்றியும், அதன் கன்றுக்கும் பருக இடமளிக்கும் வகையிலும் கறத்தல் வேண்டும். முழுமையான சுரண்டல் ஆகாது என்பதாகும்.

பாடவேளை (30 – 07)

பேண்தகு அபிவிருத்திக்காக மேள்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

01 அபிவிருத்தி தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி எது? வளம்

02 வளங்களின் வினைத்திறனை மேம்படுத்தவதற்கு பயன்படுத்தப்படும் பிரதான முறைகள் எவை?

3R

Reduce - குறைத்தல்

Reuse - மீளப் பயன்படுத்தல்

Recycle - மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்

நா.செல்வச்சந்திரன்

03 வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உலகில் கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் எவை?

5 S – வினைத்திறன் எண்ணக்கருப் பயன்பாடு

CP (Clener Production) - தூய்மையான உற்பத்தி

GP (Green Productvity) - பசுமை உற்பத்திகள்

TQM (Total Quality Management) - முழுமைத்தர முகாத்துவம்

Poka Yoke (Mistaken Proofing) - தவறுகளைப் பூச்சியமாக்குதல்

PPP (Producer Paid Principle) - கழிவகற்றும் பொறுப்பை உற்பத்தியாளர் ஏற்றல்

04 பேண்தகு அபிவிருத்திக்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எவை?

1 அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடும்போது சுற்றாடலுக்கு ஏற்படத்தக்க பாதிப்பு இழிவாகும் வகையில் திட்டமிடல்

2 சுற்றாடல் பாதகாப்பு வேலைத்திட்டங்களை திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்தலும்

3 சுற்றாடல் நேயமான பண்டங்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யுமாறு உற்பத்தியளாரை ஊக்குவித்தல்

4 சுற்றாடற் பாதுகாப்பு சட்டதிட்டங்களை வகுத்தல்

5 பேண்தகு அபிவிருத்தியின் முக்கியத்துவம்ட தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டல்

6 மிகை நுகர்வைக் கட்டுப்படுத்தத்தக்க சுற்றாடல் நேயமான வாழ்க்கை முறைக்குப் பொதுமக்களை வழிப்படுத்தல்

பாடவேளை (30 – 08)

பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு திணைவனங்கள், அமைப்புக்களின் கடமைகளும் பொறுப்புக்களும்

நா.செல்வச்சந்திரன்

01 பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமைகள் எவை?

1 சூழல்நேய வாழ்க்கை கோலத்துடன் பரிச்சயப்படல்

2 அபரிமிதமான நுகர்வைத் தவிர்த்தல்

3 சூழல்நேய மனப்பாங்குகளை விருத்தி செய்தல்

4 கழிவுப்பொருட்களை முறைமையான வகையில் வெளியேற்றுதல்

5 பௌதிகச் சூழலுக்கு பங்கம் விளைவிக்கத்தக்க செயற்பாடுகளைத் தவிர்த்தல்

6 வளங்களைச் சிக்கமாகப் பயன்படுத்தல்

7 பேண்தகு அபிவிருத்தியின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்துச் சமூகத்துக்கு அறிவூட்டம் செய்தல்

8 வலுக்சக்தி பாதுகாப்பு

பாடவேளை (30 – 09)

பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமைகளும் பொறுப்புக்களும்

01 பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு நிறுவனங்களினதும், அமைப்புக்களினதும் கடமைகள் எவை?

1 சுற்றாடலுக்கு ஏற்படத்தக்க பாதிப்புக்கள் குறித்துத் தேடியறிதல், தகவல் சேகரித்தல், குறித்த பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களுக்கு அறிவூட்டம் செய்தல்

2 பெண்தகு அபிவிருத்தியின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டம் செய்தல்

3 உளிமையான வாழ்க்கைக் குறிக்கோள்கள், எண்ணங்கள், நடத்தைகளைச் சமுகமயப்படுத்துதல்

4 மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பண்டங்கள், சேவைகளின் நுகர்வை இழிவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்தலும்

நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (30 – 10)

பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக அரசின் கடமைகளும் பொறுப்புக்களும்

01 சூழலின் பிரதான அழிவுக்குக் காரணம் எது?

வறுமை

01 பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக அரசின் கடமைகளும் பொறுப்புக்களம் எவை?

1 சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களைத் தயார்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்

2 சுற்றாடலைப் பாதுகாத்தல் தொடர்பாகப் பொதுமக்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்திசெய்ய நடவடிக்கை எடுத்தல்

3 வறுமையைப் போக்க நடவடிக்கையெடுத்தல்

4 உற்பத்தி, வநியோகம், நுகர்வு ஆகியன தொடர்பாகக் காணப்படும் சமனற்ற நிலைமைகளை அழிவாக்கல்

நா.செல்வச்சந்திரன்

5 பேண்தகு அபிவிருத்தியின் மீது பங்களிப்புச் செய்யத்தக்க வினைத்திறனான சுற்றாடல் சட்டதிட்டங்கள், கொள்கைகளை ஏற்படுத்தல்

6 சுற்றாடல் நேயமானவையல்லாத பண்டங்கள், சேவைகளின் உற்பத்தியை இழிவாக்க நடவடிக்கையெடுத்தல்

7 சூழல் பாதுகாப்பு மதிப்பிடல்

8 சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம்

9 சுற்றாடல் சுகதாரங்களை அறிமுகம் செய்தல்

10 சூழல் பாதுகாப்பிற்குட்பட்ட பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல்

11 பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல்

12 அபரிமிதமான நுகர்வைக் கட்டுப்படுத்துகின்ற சூழல்நேயவ ாழ்க்கை முறைக்கு மக்களை வழிப்படுத்துதல்

அலகு 05

சர்வதேச உறவுகள்

(பாடவேளை 20)

பாடவேளை (30 – 11)

சர்வதேச உறவுகள் என்பதன் விளக்கம்

01 ஒரு நாட்டின் உற்பத்தியை தீர்மானிக்கும் காரணிகள் எவை?

புவியியல் அமைவிடம், காலநிலை, வானிலையின் செல்வாக்கு, இயற்கை வளங்களின் பரம்பல்

02 ஒரு நாடு பொருட்களை இறக்குமதி செய்வதன் நோக்கம் யாது?

தமது நாட்டில் உற்பத்தி செய்து கொள்ள முடியாத பொருட்களை பிற நாடுகளில் இருந்து பெற்று தமது தேவையைப் பூர்த்தி செய்தல்.

03 நாடுகளுக்கிடையிலான தொடர்பு மேம்படக்காரணமாக அமைந்தவை எவை?

நாடுகாண் பயணங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள்


வை. செல்வச்சந்திரன்

04 சர்வதேச உறவுகள் என்றால் என்ன?

1 சர்வதேச உறவுகள் என்பது நாடுகளுக்கிடையே இடம்பெறும் அனைத்துவிதமான உறவுகள் ஆகும்.

2 அரசினது அதிகாரம் மிக்க அல்லது அதிகார பூர்வமான அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்படும் அரச மட்டத்திலான தொடர்புகளாகும்.

3 இரண்டு அல்லது இரண்டிற்று மெற்பட்ட நாடுகளுக்கிடையில் அல்லது ஓரி அரசுக்கும் சர்வதேச நிறுவனங்களுக்குமிடையில் அல்லது அரசுக்கம் நபர்களுக்குமிடையில் ஏற்படக்கூடிய எவ்வாறான தொடர்புகளாகும்.



பாடவேளை (30 – 12)

சர்வதேசத் தொடர்புகளின் முக்கியத்துவம்

01 சர்வதேச உறவுகளின் முக்கியத்துவங்கள் எவை? அல்லது சர்வதேச உறவுகளுக்கான நோக்கங்கள் எவை?

1 தமது அரசுக்கு தனியே பூர்த்திசெய்து கொள்ள முடியாதவற்றைப் பூர்த்தி செய்து கொள்ளல் - மனிதத் தேவைகள் சிக்கலடைந்ததன் காரணமாக அரசினால் அதனது தேவைகளை நிறைவுசெய்துகொள்ள முடியாமல் போனது. நாடுகளுக்கிடையில் வளங்களின் தன்மை வேறுபட்டதன் காரணமாக உற்பத்திகளும் வேறுபட்டன. எனவே தமது நாட்டுப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், தமக்கு தேவையானவற்றை இறக்குமதி செய்வதற்கும் நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் ஏற்பட்டன.

2 அரசியல், பொருளாதார, கலாசார, சமூகத்துறைகளினூடே தொடர்புகளை விரிவுபடுத்திக்கொள்ளல்

3 பிரதான நாடுகளின் அதிகார பிரயோகத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளல் இன்று உலகின் பல நாடுகள், பொருளாதாரம், ஆயுதபலம் என்பவற்றால் பலமான நிலையை அடைந்துள்ளன. இவை பலமற்ற நாடுகள் மீது அதிக்கத்தைச் செலுத்த முனைகின்றன. அரசியல் ரீதியாக அதிகாரம் செய்தல், கடன், மற்றும் நன்கொடை வழங்கல், உள்நாட்டு யுத்தத்திற்கு ஆயுதம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை பலமான நாடுகள் மேற்கொள்ளுகின்றன. இத்தகைய நிலையிலிருந்து பாதுகாக்க சர்வதேச உறவுகள் உதவுகின்றன.

ஆசிரியர் செல்வச்சந்திரன்

4 பாதுகாப்புக் கொள்கைகள் மூலம் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தடுத்தல் உலகின் பெரும்பாலான நாடுகள் தமது பொருளாதார தொடர்புகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்குப் பாதுகாப்புக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றன. உதாரணமாக பல்வேறு ஆடைகளை வாங்குதல், உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளல் ஆகியவற்றின் மூலம் பொருள்களுக்கான ஒரு நிலையான விலையை ஏற்படுத்திக்கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பாடவேளை (30 – 13)

சர்வதேச தொடர்புகளை வளர்த்துக் கொள்வதில் பங்களிப்புச் செய்த காரணங்கள்

01 சர்வதேச உறவுகளின் வகைகள் எவை?

இராஜதந்நதிர உறவு, விரதியல் உறவு

02 இராஜதந்திர உறவு என்றால் என்ன?

நா.செல்வச்சந்திரன்

நாடுகளுக்கிடையில் காணப்படும் சுமுகமான உறவுகளாகும். அதாவது தூதுவர்கள், ஆணையாளர்கள் மூலம் அரச மட்டத்தில் நபர்களுக்கிடையில் மேற்கொள்ளப்படும் அரசியல் தொடர்புகளாகும். ஒரு நாட்டின் வெளிநாட்டுக்கொள்கையே இந்த உறவு ஏற்படக் காரணமாக அமைகிறது. சர்வதேச மாநாடுகள், வலய மட்ட அமைப்புக்கள், இரு தரப்பிலான அரச தலைவர்களின் சந்திப்புக்கள், விசேட தூதுவர்களின் கருத்துப்பரிமாற்றம், வெளிநாட்டு அமைச்சர்களின் தொடர்புகளால் இது பலப்படுத்தப்படுகின்றது.

03 விரதியல் உறவுகள் என்றால் என்ன?

யுத்த ரீதியாக நாடுகளுக்கிடையில் இடம்பெறும் உறவுகளாகும். யுத்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்த நாடுகள் இந்த உறவினை கடைப்பிடிக்கின்றன. உதாரணமாக முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது இவ்வுறவு பல நாடுகளால் பின்பற்றப்பட்டது. இவ்வுறவு மூலம் யுத்தப் பயிற்சி அளித்தல், அதற்குத் தேவையான விசேட வசதிகளை அளித்தல், யுத்த உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், இராணுவ உதவி, மருந்துவகை போன்றன வழங்கப்படும். உலக நாடுகளினிடையே அதிகார சமநிலையை ஏற்படுத்த இது உதவுகின்றது.

04 சர்வதேச உறவுகள் விருத்தியடைந்துள்ள பல்வேறு துறைகள் எவை?

இராஜதந்திர உறவுகள், தொழினுட்ப உறவுகள், கல்விசார் தொடர்புகள், கலாசாரத்தொடர்பு, பொருளாதாரத் தொடர்பு, போக்குவரத்து, தொடர்பாடல்

தா.செல்வச்சந்திரன்

05 சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை?

1 வளங்களின் சமமற்ற பரம்பல்

உதாரணமாக கணிய எண்ணெய் மத்தியதரைக்கடல் நாடுகளில் அதிகமாகக் காணப்பட வேறு பல நாடுகளில் அவை இல்லாமையும்.

2 அனைத்துத் தெவைகளையும் தமது நாட்டினுள்ளே பூர்த்தி செய்ய முடியாமை.

தமது நாட்டுக்குத் தெவையான அனைத்துப் பொருட்களை், சேவைகளையும் உற்பத்தி செய்ய முடியாத சூழல் இன்றுள்ளது. எனவே இன்னொரு நாட்டில் தங்கியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கை கோதுமை, சீனி என்பவற்றை இறக்குமதி செய்தல்

3 மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்தல்

ஒரு நாட்டில் எற்பத்தி செய்யப்படும் பொருட்களும் சேவைகளும் அந்த நாட்டுத் தேவைகளோடு ஒப்பிடும் போது மிகையாகக் காணப்படலாம். இவற்றை பற்றாக்குறையாக உள்ள நாடுகளுக்கு விற்பனை செய்ய முனைகின்றன.

4 போக்குவரத்து மற்றும் தொடர்பாடலின் விருத்தி

5 நவீன தொழில்நுட்பத்திறன்களைப் பெற்றுக்கொள்வதன் அவசியம்.

6 அனர்த்தங்கள் மற்றம் இடர்களின் போது நிவாரணம் பெற்றுக்கொள்ளல்

7 அரசியல், பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளை விருத்திசெய்து கொள்ளல்

பாடவேளை (30 – 14)

சர்வதேச தொடர்புகளின் இலங்கை மீதான தாக்கங்கள்

01 சர்வதேச உறவுகளின் தற்போதைய இயல்புகளுள் எவை?

1 இரண்டாம் உலகப் போரின் பின்னர் நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

2 தற்போது உலகம் ஓர் அகிலக் கிராமமாக மாறியுள்ளதோடு சர்வதேசத் தொடர்புகளும் துரிதமாக வளரச்சியடைந்துள்ளமை

3 இலங்கை, அணிசேரா வெளிநாட்டுக்கொள்கையைப் பின்பற்றி உலக நாடுகளுடன் தொடர்புகளைப் பேணிவருகின்றமை

02 பலம் வாய்ந்த நாடுகள் பலவீனமான நாடுகள் மீது செல்வாக்குச் செலுத்தும் துறைகள் எவை?

1 சர்வதேச வர்த்தகம் 2 கடன் மற்றும் நிவாரண வழங்கல்

3 பொருளாதார அபிவிருத்தி 4 பாதுகாப்புத்துறை

5 வேலைவாய்ப்பு வழங்கல்

செல்வச்சந்நிதி

03 சர்வதேச உறவுகள் இலங்கையின் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதைக் குறிப்பிடுக?

1 சர்வதேச வர்த்தகம்

இலங்கையின் பிரதான உற்பத்திப் பொரட்களுக்கு சர்வதேச சந்தையில் குறைந்த விலை நிர்ணயிக்கப்படுவதால் ஏற்றுமதியின் மூலம் குறைந்த வருமானமே கிடைக்கின்றது. இதனால் நிலையான ஒப்பந்தங்களையும், நிலையான விலையினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக ஆடை ஏற்றுமதியின் போது அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துள்ளமை. எனினும் சில வியாபார ஒப்பந்தங்கள் நீக்கப்பட்டதன் காரணமாக சர்வதேச வர்த்தகத்தில் தாக்கத்தை எதிர்கொண்டுள்ளது.

உதாரணம் GSP வரிச்சலுகை

நா.செல்வச்சந்திரன்

2 கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்

கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் போது பல்வேறு நிபந்தனைகளை ஏற்றுக்கொளள் வெண்டிய சூழல் ஏற்படுகின்றது. இத்தகைய நிபந்தனை நாடுகள் மட்டுமன்றி கடன் வழங்கும் நிறுவனங்களும் விதிக்கின்றன. உதாரணம்

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம்.

நிபந்தனைகளுக்கான எடுத்துக்காட்டுக்கள்

1 பெயர் குறிப்பிடப்படும் செயற்பாடுகளுக்கு மட்டுமே கடன் அல்லது உதவியைப் பயன்படுத்தல் வேண்டும்.

2 கடன் மற்றும் வட்டியைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகள் தொடர்பாக குறுகிய காலப்பகுதியை வழங்குதல்

3 கடன் வழங்கும் நாட்டினது பௌதிக மற்றும் மனித வளங்களை உரிய திட்டங்களினூடாகப் பயன்படுத்தல் வேண்டும்.

3 பொருளாதாரத்துறை

பொருளாதாரத்தை நிலைபெறச்செய்ய மேற்கொள்ளப்படும் வழிகள்

1 கடன் மற்றும் உதவிகளை அதிகளவில் பெறுதல்

2 திறைசேரி உண்டியல்களை விநியோகித்தல்

3 வங்கி வட்டி வீதத்தை உயர்த்துதல்

4 தேசிய பாதுகாப்பு

ஆயுதங்களை வழங்குதல், அதிக விலைக்கு விற்பனை செய்தல், யுத்த உபாய அறிவுகளை வழங்காமை,

5 தொழில் வழங்குதல்

இலங்கைக்கான தொழில் சந்தையினை நிர்ணயித்துக் கொடுக்கும் நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளும், தென்கொரியாவும் முக்கிய இடம்பெறுகின்றது. தொழில் வழங்குதல் தொடர்பான பிரச்சினைகள் வருமாறு

நா.செல்லச்சந்திரன்

1 தொழில் எண்ணிக்கையை எல்லைப்படுத்தல்

2 வேலைவாய்ப்புத் தகுதிகளை நிர்ணயித்தல்

3 இலங்கைக்கு அனுப்பும் பணத்திற்காக வரையறைகளை வகுத்தல்

4 தொழிலாளர்களை சித்திரவதைகளுக்குட்படுத்தல்

பாடவேளை (30 – 15)

பிராந்திய அமைப்புக்களின் தோற்றம்

01 பிராந்திய அமைப்புக்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் எவை?

இவை புவியியல் வலயங்களை அடிப்படையாகக் கொண்டவை

1 யுத்த நோக்கங்களை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டவை

2 ஒத்துழைப்பினை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டவை

02 யுத்த நோக்காகக் கொண்ட அமைப்புகளின் தோற்றத்திற்கான பின்னணிகள்

- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நாடுகள் இரண்டு சக்திகளின் கீழ் அணி திரண்டமை
- முதலாவது ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் மேற்கு ஐரோப்பிய அணி. சோவியத் ரஸ்யா தலைமையில் கிழக்கு ஐரோப்பிய அணியும் தோன்றின.
- மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முதலாவது அமைப்பாக நேட்டோ(வடக்கு அத்திலாந்திக் உடன்படிக்கை) மேற்கு ஐரோப்பிய அணியினால் ஏற்படுத்தப்பட்டது. இதற்குப் பதிலடியாக கிழக்கு ஐரோப்பிய அணியினால் வார்சோ அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- சோவியத் ரஸ்யாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வார்சோ பலமிழந்து போக நேட்டோ மட்டும் செயற்பட்டு வருகின்றது.

நா. இலங்கேஸ்வரன்

03 பொருளாதார நோக்கத்தைக் கொண்ட அமைப்புக்களின் தோற்றத்திற்கான பின்னணி

- இந்நோக்கத்தை கொண்ட அமைப்புக்கள் மேற்கு ஐரோப்பாவில் முதன் முதலாகத் தோன்றின. 1957இல் தோற்றம் பெற்ற ஐரோப்பிய பொருளாதாரக் கட்டமைப்பு முதலாவது பொருளாதார அமைப்பாக விளங்குகின்றது.
- இதனையடுத்து ஐரோப்பிய சங்கம், லத்தீன் அமெரிக்க சுதந்திர வர்த்தக அமைப்பு என்பன தோற்றம் கண்டன
- ஆசிய வலயத்தினுள் ஆசியான் அமைப்பு 1967ல் தோற்றம் பெற்றது. 1985இல் தென்னாசிய நாடுகளால் சார்க் அமைப்பு தோற்றம் பெற்றது.

பாடவேளை (30 – 16)

1.சார்க் அமைப்பு

01 தென்னாசிய வலய நாடுகளால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அமைப்பு எது? சார்க்

02 சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் எவை?

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான்

03 சார்க் அமைப்பில் இறுதியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நாடு எது? ஆப்கானிஸ்தான்

04 சார்க் அமைப்பு தொற்றம் பெற்ற ஆண்டு எது? 1985 டிசம்பர் 8

05 சார்க் அமைப்பின் ஆரம்ப மாநாடு எங்கே இடம்பெற்றது, அதற்கான காரணம் யாது?

டாக்காவில் முன்னாள் பங்களாதேஸின் பிரதமர் சியா உர் ரஹ்மானை நினைவு கூறும் வகையில்

நா.செல்வச்சந்திரன்

06 சார்க் அமைப்பின் நோக்கங்கள் எவை?

1 தென்னாசிய வலயத்திற்கு உட்பட்ட மக்களது சுகதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்

2 சார்க் வலய நாடுகளது பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்

3 சகல பிரசைகளும் கௌரவமாக வாழ்வதற்கான இடத்தினைப் பெற்றுக்கொடுத்தல்.

4 வலய மக்களின் ஒளன்றிணைந்த தன்னம்பிக்கையை மேம்படுத்தல்

5 அங்கத்துவ நாடுகளின் பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளல் மற்றும் அவற்றைக் கவனத்திற் கொண்டு அந்நியோன்னியமாகச் செயற்படல்

07 சார்க் அமைப்பின் சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளும் அமைப்பு எது, எங்கே அமைந்துள்ளது

செயலாளர் அலுவலகம், நேபாளத்தின் கத்மண்டு

08 சார்க் நாடுகளில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய துறைகள் எவை?

விவசாய வளர்ச்சி, ஏற்றுமதி, கலாசார வளர்ச்சி, விளையாட்டு, சுகாதாரம், நலன்புரிச்சேவை

09 சார்க் அமைப்பு நாடுகளின் பொதுவான இயல்புகள் எவை?

1 அனைத்து நாடுகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாக உள்ளமை

2 பெரும்பாலான நாடுகளில் அரசியல் மற்றும் யுத்த நிலைமைகள் உள்ளன.

3 போதைப்பொருள் ஒழிப்பு, தீவிரவாத ஒழிப்பு என்பவற்றில் அனைத்து நாடுகளும் ஈடுபட்டுள்ளமை

10 சார்க் அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு சவாலாக உள்ள பிரச்சினை எது?

இந்தியா – பாகிஸ்தான் விரிசல்

செல்வச்சந்திரன்

11 சார்க் அமைப்பு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?

1 அங்கத்துவ நாடுகளிடையே சுதந்திர வியாபாரச் சந்தையொன்றை ஏற்படுத்தல்

2 தொழினுட்ப அறிவுப் பரிமாற்றத்தினுடாகப் நவீன உலகத்தோடு உறவினை ஏற்படுத்திக் கொள்ளல்

3 சுற்றுலாத்துறையை விருத்தி செய்தல்

4 சூழல் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

5 இயற்கை அனர்த்தங்களை குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்

12 சார்க் நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தங்கள் எவை?

1 தென்னாசிய நாடுகளது வர்த்தக ஒப்பந்தம் - SAPTA

ஆரம்பம் :- 7.12.1995

நோக்கம் :- வலய நாடுகளின் வர்த்தகத்தை மேம்படுத்தல்.

வளங்களைச் செயற்றிறன் மிக்கதாகப் பயன்படுத்தல்.

வரிச்சலுகையைப் பெற்றுக் கொடுத்தல்.

2 தென்னாசிய நாடுகளது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் - SAFTA

ஆரம்பம் :- 1.1.2006

நோக்கம் :- வலய நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தக வலயத்தை

உருவாக்கல்.

வலய நாடுகளது பொருளாதார ஒத்துழைப்பை

உறுதிப்படுத்தல்.

நா.செல்வச்சந்திரன்

வலய நாடுகளது உற்பத்திச் செயற்பாட்டை மேம்படுத்தல்.

ஊழியச் சந்தை வாய்ப்புக்களை விரிவாக்கல்.

13 சார்க் அமைப்பு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ள வேறு அமைப்புக்கள் எவை?

உங்காட், யுனிசெப், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திச் செயற்றிட்டம், கொழும்புத் திட்டம்

பின்தொடர்வேலை :- தென்னாசிய நாடுகளை உலகப்படத்தில் குறித்துக்காட்டுக.

பாடவேளை (30 – 17)

2 ஆசியான் அமைப்பு

01 தென்கிழக்காசிய நாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு எது? அது தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுக?

ஆசியான் ஆரம்பம் :- 1967

தலைமையகம் :- இந்தோனேசியாவின் ஜகார்த்தா

உறுப்பு நாடுகள் :- இந்தோனேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலப்பைன்ஸ், மலேசியா, வியட்னாம், புரூனே, மியன்மார்

நோக்கம் :- 1 ஒத்துழைப்புடனான ஒன்றுபட்ட பொருளாதார முறையை அங்கத்துவ நாடுகளில் செயற்படுத்தல்

2 பரஸ்பர உதவியுடனும் ஒத்துழைப்படனும் ஆராய்ச்சி துறைகளை மேம்படுத்தல்

நா.செல்வச்சந்திரன்

3 விவசாய கைத்தொழில் துறைகளினது வளர்ச்சிக்காக ஒன்றுபடுதல்

4 அங்கத்துவ நாடுகளது மனித வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் தொடர்பாடல் துறையை வளர்ச்சி அடையச் செய்தல்

பாடவேளை (30 – 18)

3 கொழும்புத் திட்டம்

01 தென் மற்றும் தென்மேல் ஆசிய நாடுகளது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு எது?

கொழும்புத்திட்டம்

02 கொழும்பத் திட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

1950

03 அவ்வமைப்பின் உருவாக்கத்திற்குக் காரணமானவர்கள் யார்?

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சேர்பர்சி ஸ்பென்டர்

04 கொழும்புத்திட்ட அங்கத்துவ நாடுகள் சிலவற்றைக் குறிப்பிடுக?

இலங்கை, இந்தியா, ஜப்பான், கனடா, அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா

நா.செல்வச்சந்திரன்

05 இவ்வமைப்பினால் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கப்படும் சேவைகள் எவை?

1 விவசாயம், கல்வி, சுகாதாரம், தொடர்பாடல் போன்றவற்றுக்கு செவை வழங்குதல்

2 பயிற்சிக்காக புலமைப்பரிசில்களை வழங்குதல்

3 ஆய்வு உபகரணங்களை வழங்குதல்

06 இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் எவை?

இயந்திரங்கள், வாகனங்கள், விவசாய உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள், தொழில்நுட்ப அறிவு, துறைசார் பயிற்சிகள் வழங்குதல், புலமைப்பரிசில் வழங்குதல், கல்விக்கான உபகரணங்கள் வழங்குதல்

4 பிம்ஸ்டெக் அமைப்பு

07 வங்களாவரிகுடாவிற்கு முகம் கொடுக்கும் நாடுகளால் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

பிம்ஸ்டெக் (BIMSTEC)

ஆரம்பம் :- 1988

மத்திய நிலையம் :- பங்காளதேஸின் டாக்கா

அங்கத்துவ நாடுகள் :- பங்காளதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியன்மார், தாய்லாந்து

நோக்கம் :- அங்கத்துவ நாடுகள் ஒன்றிணைந்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளல்

பாடவேளை (30 – 19)

சர்வதேச அமைப்புக்கள்

நா.செல்வச்சந்திரன்

1 ஐக்கிய நாடுகள் சபை

01 சர்வதேச அமைப்புக்கள் தோற்றம் பெற்றதன் பின்னணி யாது

- ஒரு நாடு தனது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு
  - பல நாடுகள் ஒன்றிணைந்து பொதுத்தேவைகளை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட அமைப்புக்களே சர்வதேச அமைப்புக்களாகும்.
  - மிகப்பாரியளவில் சேவை வழங்கும் பன்னாட்டு அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபையும் அதன் இணை நிறுவனங்களும் உள்ளன.

02 இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அவ்வாறான யுத்தம் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

ஐக்கிய நாடுகள் சபை

03 ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்திற்குக் காரணமானவர்கள் யார்?

ஐக்கிய அமெரிக்கா - பிராங்ளின் ரூஸ்வெல்ட்

ருஸ்யா - ஜோசப் ஸ்டாலின்

பிரித்தானியா - வின்சன் சேர்ச்சில்

04 ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்ற ஆண்டு எது?

1945

05 ஐக்கிய நாடுகள் தோற்றம் பெற்ற போது எத்தனை நாடுகள் அங்கத்துவம் பெற்றன?

50

06 ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?

ஐக்கிய அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில்

07 ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் எவை?

நா.செல்வச்சந்திரன்

1 உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் முன்னெடுத்தல்

2 இனங்களுக்கிடையிலான நட்புறவை வளர்த்தல்

3 பொருளாதார, சமூக, கலாசார மற்றும் மானிடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல்

4 மனித உரிமைகளை உறுதிப்படுத்தல்

08 ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பினைக் குறிப்பிடுக?

1 பொதுச்சபை 2 பாதுகாப்புச்சபை

3 செயலகம் 4 சர்வதேச நீதிமன்றம்

5 சமூக பொரளாதார சபை 6 நம்பிக்கை பொறுப்பாண்மைச் சபை

1.1 பொதுச்சபை

09 ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையினைப் பற்றிக் குறிப்பிடுக?

1 ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும்.

2 ஒவ்வொரு அங்கத்துவ நாட்டிற்கும் ஒரு வாக்குரிமைக்கு உரித்துடையது.

3 வருடத்திற்கு ஒருமுறை கூடும்.

4 அதிகமான அங்கத்தவர்களது வேண்டுகோளின்படி விசேட கூட்டங்கள் நடாத்துவதற்கு அனுமதியுண்டு.

10 பொதுச்சபையின் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு அமைவாக முன்வைக்கப்படும் எந்தவொரு விடயம் குறித்தும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானமெடுத்தல்.

நா.செல்வச்சந்திரன்

2 ஆயுத விளக்கம், ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கொள்கைகள், வர்சதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு குறித்து உரிய கொள்கைகளை அவதானத்திற் கொள்ளல்

3 பாதுகாப்புச்சபை மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் அறிக்கைகளை மீளாய்வு செய்தல்

4 ஐக்கிய நாடுகள் சபையின் வரவு செலவுத்திட்ட அறிக்கைகளைப் பரிசீலித்தல்

5 பாதுகாப்புச்சபையின் ஆலோசனையின்படி பொதுச்செயலாளரை தெரிவு செய்தல்

பாடவேளை (30 – 20)

1.2 பாதுகாப்புச்சபை

01 பாதுகாப்புச்சபையின் உறுப்பு நாடுகள் எத்தனை?

15

02 பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் எத்தனை, அவை எவை?

5 சீனா, பிரான்ஸ், ரஸ்யா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா

03 நிரந்தரமற்ற 10 நாடுகளின் பதவிக்காலம் எவ்வளவு?

2 வருடம்

04 பாதுகாப்புச்சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட எத்தனை வாக்குகள் வேண்டும்?

9

05 இரத்ததிகாரம் கொண்ட நாடுகள் எவை?

நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தும்

நா.செல்வச்சந்திரன்

06 பாதுகாப்புச்சபையின் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 சர்வதேச சமாதானத்தையும் ஒற்றுமையையும் பேணல்

2 சர்வதேசப் பிரச்சினைகளுக்கு ஏதுவாக அமையுட் சகல காரணிகளையும் ஆராய்தல்

3 ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்

4 ஆயுதப்பாவனைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு திட்டங்களை மேற்கொள்ளல்

1.3 பொருளாதார மற்றும் சமூக சபை

07 பொருளாதார மற்றும் சமூக சபையின் உறுப்பு நாடகள் எத்தனை, அவை எவ்வாறு தெரிவு செய்யப்படும்?

54 .பதவிக்காலம் 3 வருடம். 3 வருடத்திற்கு ஒருமுறை 18 அங்கத்தவர்கள் பதவி விலக புதிய 18 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

08 இதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

2 சர்வதேச மாநாடகளை நடாத்துதல்

3 ஐக்கிய நாடுகளின் விசேட தாபனங்களுடன் உடன்படிக்கைகளை ஒழுங்குபடுத்தல்

4 சபை நடவடிக்கைகள் தெர்ர்பாக அரச சார்பற்ற அமைப்புக்களிடம் ஆலோசனை கேட்டல்

1.4 நம்பிக்கைப் பொறுப்புச் சபை

நிலைவச்சந்திரன்

09 நம்பிக்கைப் பொறுப்புச்சபையின் உறுப்பினர்கள் யாவர்?

1 நம்பிக்கை ஆள்புலன்களை நிர்வகிக்கின்ற உறுப்பினர்கள்

2 நம்பிக்கை ஆள்புலன்களை நிர்வகிக்காத நிரந்தர உறுப்புடைய பாதுகாப்புச்சபை உறுப்புரிமை

3 பொறுப்பாண்மைச் சபையினால் 3 வருட காலப்பகுதிக்கென தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள்

10 இதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 நிர்வகிக்கின்ற அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களை கருத்திற்கொள்ளல்

2 மனுக்களையேற்று நிர்வகிக்கின்ற அதிகார சபையுடனான கலந்தாலோசனையுடன் பரீட்சித்தல்

3 அந்த ஆள்புலன்களுக்குச் செல்லுதல்

பாடவேளை (30 – 21)

1.5 சர்வதேச நீதிமன்றம்

01 ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதித்துறை நிறுவனம் எது?

சர்வதேச நீதிமன்றம்

02 சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை எத்தனை? ஆவர்களின் பதவிக்காலம் எவ்வளவு?

9 பேர். 15 வருடங்கள்

03 இலங்கை சார்பில் நீதிபதியாக இருந்தவர் யார்?

வீரமந்திரி

04 அதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

நா.செல்லச்சந்திரன்

1 ஐக்கிய நாடுகள் சபை அதன் ஏனைய நிறுவனங்களுக்கு நீதி ஆலோசனை வழங்கல்

2 அங்கத்துவ நாடுகள் மூலம் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்தல்

3 அங்கத்துவ நாடுகள் முன்வைக்கும் முறைப்பாடுகளுக்குரிய விசாரணைகளில் பங்குபற்றுவதாயின் சர்வதேச நீதிமன்றம் வழங்கம் தீர்ப்பையேற்றல்

1.6 செயலகம்

05 ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிர்வாகக் காரியாலயம் எது?

செயலகம்

06 செயலகத்திற்குப் பொறுப்பானவர் யார்? அவரின் பதவிக்காலம் எவ்வளவு?

பொதுச் செயலாளர். 05 வருடம். ஒருவர் இரண்டு தடைவை பதவியில்

இருக்கலாம்

07 இதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 அமைப்பின் ஆண்டறிக்கையைத் தயாரித்து முன்வைத்தல்

2 ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையை நிர்வகித்தல்

3 பிரச்சினைத்தீர்வின் போது சமாதானத் தூதுவனாகத் தலையிடுதல்

4 ஐக்கிய நாடுகளின் விடயங்களுக்கேற்ற வகையிலான சர்வதேச மாநாடுகளைக் கூட்டுதல்

பாடவேளை (30 – 22)

ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனங்கள்

01 ஐக்கிய நாடுகள் சபையின் இணைநிறுவனங்கள் எவை?

1 உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)

2 சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO)

நா.செல்வச்சந்திரன்

3 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP)

4 ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF)

5 ஐக்கிய நாடுகளது கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார தாபனம் (UNESCO)

6 சர்வதேச நாணய நிதியம் (IMF)

7 உலக உணவு வேலைத்திட்டம் (WFP)

8 உலக சுகாதார அமைப்பு (WHO)

9 ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையாளர் நாயகம் (UNHCR)

02 தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் நோக்கங்களையும் தலைமையகங்களையும் குறிப்பிடுக?

அமைப்பு	ஆரம்பம்	நோக்கம்
UNESCO	1945	➢ அங்கத்துவ நாடுகளின் கல்வி நிலை, தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு, பிரிவுகளின் அபிவிருத்தி ➢ சர்வதேச அறிவு விருத்தி மூலம் சமாதானத்தை ஏற்படுத்தல்
UNICEF	1946	➢ சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல் ➢ பூரண சிறுவர் அபிவிருத்தியை மேம்படுத்தல் ➢ சிறுவர் அபிவிருத்திக்காக குறித்த நாடு ஐக்கிய நாடுகள் வேறு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து செயற்படுதல்
UNDP	1965	➢ அபிவிருத்தி அடையும் நாடுகளின் பொருளாதார, சமூக விருத்தியினைத் துரிதப்படுத்துவதற்காக உதவுதல் ➢ அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் ➢ வலுவிருத்தி மற்றும் புவியியல் ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்தல்

நா. தேவச்சந்திரன்

பாடவேளை (30 – 23)

அமைப்பு	ஆரம்பம்	நோக்கம்
UNHCR	1950	➢ அகதிகளுக்கான சர்வதேச பாதுகாப்பினை வழங்குதல் ➢ அகதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்தல் ➢ அகதிகளை மனிதாபிமான முறையில் நடாத்துதல் ➢ அகதிகள் தமது சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான ஆரம்பச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்
WFP	1963	➢ வறுமையையம் பட்டினியையும் இல்லாதொழித்தல் ➢ பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்தல் ➢ அனர்த்தங்களில் சிக்கியோருக்கு உதவுதல்

UNFPA	1969	➢ அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளது சனத்தொகைப் பிரச்சினைக்கு உதவுதல். ➢ அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளது சனத்தொகைக் கட்டுப்பாடு தொடர்பான வேலைத்திட்டங்களுக்கு உதவுதல் ➢ அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குச் செயற்படுதல்.
FAO	1945	➢ கிராமிய மக்களின் போசாக்கு மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் ➢ விவசாய மேம்பாட்டுக்காகச் செயற்படுதல்

பாடவேளை (30 – 24)

அமைப்பு	ஆரம்பம்	நோக்கம்
ILO	1946 (1919)	➢ தொழிலாளர்களது சமூக அபிவிருத்தி. ➢ தொழிலாளர்களது சேவைகள் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு சர்வதேசக் கொள்கைகள் மற்றும் செயற்றிட்டங்களை வகுத்தல்.
WHO	1948	➢ சகலருக்கும் உயர் சுகதாரச்சேவை வழங்குவதற்குச் செயற்படுதல். ➢ நோய்களற்ற சிறந்த தேகாரோக்கியமும் மனநிலையும் உடைய சுகதார நிலையை உறுதிப்படுத்தல்.
IBRD	1949	➢ அங்கத்துவ நாடகளது மக்கள் சிறந்த வாழ்கைத்தரத்தைக் கொண்டு விளங்குவதற்குப் பொரளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு உதவுதல்.
IMF	1944	➢ சர்வதேச ரீதியாக நிதி ஸ்திரத்தன்மையையும் முறையான நாணய பெறுமதி முறையையும் மேற்கொள்ளல் ➢ நாடுகளிடையே பல தரப்பினரிடையேயும் கொடப்பனவு முறையை ஆரமப்பித்தல் ➢ சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கான வசதிகளை செய்தல்

நா.செல்வமுத்திரன்

பாடவேளை (30 – 25)

பொதுநலவாய அமைப்பு

01 பிரித்தானிய காலனித்துவத்தின் கீழிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளை வளர்த்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது? பொதுநலவாய அமைப்பு

02 அரசுகளின் சம்மேளனம் எனும் பெயரில் மாநாடு இடம்பெற்ற ஆண்டு எது? 1911

03 பொதுநலவாய அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது? 1944

04 பொதுநலவாய அமைப்பின் தோற்றத்திற்குக் காரணமான அறிக்கை எது?

1839ம் ஆண்டு டர்ஹம் கொமிசன் அறிக்கை

05 பொதுநலவாய அமைப்பின் தலைவர் யார்? பிரித்தானிய முடி

06 ஆரம்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை? அவை எவை?

7

பிரித்தானியா, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, சிம்பாவே, கனடா, நியுசிலாந்து, இந்தியா

நா.செல்வச்சந்திரன்

07 பொதுநலவாய அமைப்பின் நோக்கங்கள் எவை?

1 மனித இனத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்குக் காரணமாகும் சர்வதேச ரீதியிலான சமாதானம் மற்றும் நட்புறவை மேம்படுத்தல்

2 சாதி, வர்க்கம், சமயம் போன்ற வேறுபாடுகளின்றி அனைவரினதும் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல்

3 வறுமை, அறியாமை, நோய் போன்றவற்றை ஒழித்தலும் மக்களின் வாழ்வாதாரத்தினை விருத்திய அடையச் செய்தலும்.

4 யுத்தச் செயற்பாடுகளுக்குக் காரணமாகும் நிலைமைகளை அகற்றுவதற்காகச் சர்வதேச ஒத்துழைப்பை மேப்படுத்தி அநீதியை ஒழித்து மக்களது

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்

பாடவேளை (30 – 26)

சர்வதேசத் தொடர்பு வழிகள்

01 சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் இரு பிரதான வழிமுறைகளும் எவை?

1 தூதுவர் சேவை

2 சர்வதேச வர்த்தகம்

தூதுவர் சேவை

02 பொதுநலவாயத்திற்கு உட்பட்ட நாடுகளது தூதுவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

ஆணையாளர் நாயகம்

03 தூதுவர்களின் பொறுப்புக்கள் எவை?

1 தமது நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தல்.

2 தமது நாட்டு பிரசைகளின் அபிலாசைகளைப் பாதுகாத்தல்.

3 தமது நாட்டைப் பற்றிய பிரதான விடயங்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

4 தமது நாட்டின் கருத்துக்கள் தொடர்பாக விளக்கமளித்தல்.

5 நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்தல்.

நா.செல்வச்சந்திரன்

04 தூதுவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை?

1 தமது தொழில் சுதந்திரம், சட்டதிட்டங்கள், உபாயங்கள், நியாயங்கள், ஒழுக்கம் தொடர்பான அவதானமாகச் செயற்படுதல்.

2 தமது நாட்டைப்போல் தாம் நேசை செய்கின்ற நாட்டினதும், சர்வதேச அரசியல் தன்மையினதும் விடயங்கள் தொடர்பாக அவதானமாகச் செயற்படல்.

3 அரச உபாயங்களான மத்தியஸ்தம், சமரசப்படுத்தல், பேரம் பேசுதல் போன்றவற்றை அறிந்திருத்தல்.

4 சர்வதேச சட்டதிட்டங்கள் மற்றும் சர்வதேச அரசியல் நிலைமைகளைத் தமது நாட்டின் வளர்சிக்காகப் பயன்படுத்திக்கொள்ளல்.

பாடவேளை (30 – 27)

சர்வதேச வர்த்தகம்

01 சர்வதேச வர்த்தகத்தின் வகைகள் எவை?

1 இரு பக்க வியாபாரம் - இரு நாடுகளுக்கிடையில் இடம்பெறும் வர்த்தகமாகம். உதாரணமாக இலங்கையிலிருந்து சீனாவிற்கு இறப்பரை ஏற்றுமதி செய்து சீனாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தல். இவ்வர்த்தனமானது தம்மிடையே நடைபெறும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் இடம்பெறும்.

2 பல பக்க வியாபாரம் - இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளை இணைந்து மேற்கொள்ளும் வர்த்தகமாகும். இதன் முக்கிய பண்பு ஒரு நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் இறுமதியை வேறு ஒரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதியினால் செலுத்தக்கூடியதாக இருத்தலாகும்.

நா.செல்வச்சந்திரன்

02 சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் நாணயங்கள் எவை?

அமெரிக்க டொலர், ஸ்ரெலிங் பவுண், யூரோ, ஜப்பான் ஜென்

03 சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புள்ள சர்வதேச அமைப்புக்கள் எவை?

ஐரோப்பிய பொது வர்த்தக சங்கம், உங்காட், கெட், சர்வதேச வர்த்தக அமைப்பு

பாடவேளை (30 – 28)

யுத்தம்

01 யுத்தம் என்றால் என்ன?

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகள் தமக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆயுதங்களைப் பயன்படுத்துமாயின் அதை யுத்தம் எனலாம்.

02 யுத்தத்திற்கான மிகச் சிறந்த உதாரணங்கள் எவை?

1 முதலாம் உலக மகா யுத்தம்

2 இரண்டாம் உலக மகா யுத்தம்

03 யுத்தத்தின் காரணமாக சர்வதேச உறவுகள் எவ்வாறு இடம்பெறுகின்றது?

1 அகதிகள் - தமது நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு இடம்பெயர்வதால் அவர்களை பராமரிக்க வேண்டி ஏற்படல்.

2 உதவிகள் - பாதிப்புற்ற கட்டடங்களை மீண்டும் மற்றும் ஏனையவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவிகளையும் பெறலாம்.

3 பாதுகாப்பு - தேசியப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், தேவையான ஆயுதங்களை பெற்றுக்கொள்ளவும் வேண்டி ஏற்படல். தேசிய , சர்வதேச யுத்த நிலைமைகளின் மீது அவதானமாக இருக்கும் நாடுகளே தனது தேசியப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது.

செல்லச்சந்திரன்

பாடவேளை (30 – 19)

வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படும் முறைகள்

01 வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படும் முறைகள் எவை?

1 நன்கொடை

2 கடன்

3 பொருட்களும் சேவைகளும்

02 நன்கொடை மூலம் வழங்கப்படுபவை எவை?

1 பணம்

2 பணமல்லாதவை

3 கட்டடங்கள் மற்றும் சேவைகள்

03 வெளிநாட்டுக்கடன்கள் வழங்கப்படும் முறைகள் எவை?

1 நீண்டகாலக்கடன்

2 குறுங்காலக்கடன்

3 வட்டியுடனான கடன்

4 வட்டியில்லாத கடன்

04 வெளிநாட்டு உதவிகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மூன்றைக் குறிப்பிடுக?

திரு.செல்வச்சந்திரன்

1 மகாவலி அபிவிருத்தித் திட்டம்

2 மொறஹாஹந்த நீர்த்தேக்கத் திட்டம்

3 வடக்குப் புகையிரதப்பாதையும் பெருந்தெருவும்

05 வெளிநாட்டு உதவி வழங்கும் நாடுகள் எவை?

1 ஐக்கிய அமெரிக்கா 2 இங்கிலாந்து

3 ஜப்பான் 4 இந்தியா

06 வெளிநாட்டு உதவி வழங்கும் அமைப்புக்கள் எவை?

1 உலக வங்கி

2 ஆசிய அபிவிருத்தி வங்கி

3 சர்வதேச நாணய நிதியம்

பாடவேளை (30 – 30)

சர்வதேசத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்

01 மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமாயின் சமாதானம் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ள அம்சங்கள் எவை?

பொருளாதாரம், அரசியல், சமூக, கலாசாரம்

02 உலக சமாதானத்திற்கு அளப்பரிய பங்கு வகிக்கும் அமைப்பு எது?

ஐக்கிய நாடுகள் சபை

03 சமாதானம் அற்ற நாட்டில் ஏற்படக்கூடிய செலவுகள் எவை?

1 இராணுவ நிர்வாகம் 2 ஆயுதக் கொள்வனவு

3 அங்கவீனர்கள் மற்றும் ஊனமுற்றோரைப் பாதுகாத்தல்

4 பாதிக்கப்பட்ட குடியிருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புதல்

04 யுத்தமற்ற சமாதானச் சூழல் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு காரணமாகின்றது?

ஜா.செல்வச்சந்திரன்

1 பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சி மேம்படும்

2 வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும்

3 வாழ்க்கைத்தரம் உயர்வடையும்

4 சேமிப்பு அதிகரிக்கும்

5 நாட்டின் பொருளாதாரம் உறுதியடையும்

05 சர்வதேச உறவுகளின் விளைவுகள் எவை?

1 சர்வதேச உறவுகள் விருத்தியடைவதும் அதன் மூலம் நட்புறவுகள் வளர்ச்சி காணலும்

2 புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாதல்

3 அவசர நிலைமைகளின் போது நன்கொடை, மற்றும் உதவி பெறப்படல்

4 புதிய தொழினுட்ப அறிவுப் பரிமாற்றம்

5 அபிபிருத்தி செயற்றிட்டத்திற்காக தேவையான உதவிகள் கிடைக்கப்

பெறுதல்.

நா.செல்வச்சந்திரன்